UNIVERSAL
LIBRARY
OU_208241
UNIVERSAL
LIBRARY

# பாட்டுக்கொரு புலவன்

கே. பொன்னுசாமி பி. ஏ.,
(மயிலன்)

இமயப் பதிப்பகம்
நாகப்பட்டினம்

முதற்பதிப்பு
மார்ச்சு 1954

விலை ரூபாய் ஒன்றேகால்

அச்சிட்டோர்:
நவபாரத் பிரஸ், சென்னை.

# பதிப்புரை

*********************************************

"பாடுபட்டுத் திறத்தாலே — இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்"

இது பாரதியாரின் கனவு.

அப்போது நாடு அடிமை இருளிலே அழுந்திக் கிடந்தது.

தூங்கிக்கிடந்த தமிழ்நாடு சூடு கண்ட மலைப்பாம்பு போல நெளிந்து கொடுத்துத் தலையைத் தூக்கி நிமிர்ந்து பார்த்தது. ஒரே இருள் எங்கும் மண்டிக்கிடந்தது. மறுபடியும் கண்ணைக் கசக்கிக்கொண்டு மலர மலர விழித்துப் பார்த்தது. எங்கும் மையிருட்டு. பார் முழுதும் ஏர்முனையில் நாடாண்டு நல்லரசு செய்த சேர, சோழ, பாண்டியர்களின் நிலம் பாழ்பட்டு நின்றது. கழனியில் விளைந்த செந்நெல் குவியலைக் கண்ணால் அளவிட்ட உழவனும் உழத்தியும் உண்ண உணவின்றிப் புளித்த கள்ளுக்குப் புத்தியைப் பலி கொடுத்துவிட்டார்கள். என்ன செய்கிறது? சொரணையற்றவனுக்குச் சொந்த புத்தி வரவேண்டாமா? அப்போதுதான் பாரதியார் பாடினார், பள்ளர்களுடன் தாமும் சேர்ந்து கொண்டு

ஆடுவோமே — பள்ளுப் பாடுவோமே;
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று
...விழலுக்கு நீர்பாய்ச்சி மாய மாட்டோம் — வெறும்
வீணருக் குழைத்துடலம் ஓய மாட்டோம்
நாமிருக்கும் நாடு நமதென்ப தறிந்தோம் — இது
நமக்கே யுரிமையா மென்ப தறிந்தோம்"

அப்பா...... எத்தனை ஆண்டுகள் கஷ்டப்பட்டோம்!

'இன்னுயிர் தந்தெமை ஈன்று வளர்த்த' நாட்டின் அடிமை விலங்கை அறுத்தெறிந்து சுதந்திரம் பெற்றோம்.

அந்தக் காலத்தில் உயிரும் உணர்வும் நிரம்பிய கவிதை மழை பொழிந்த மகாகவி பாரதியின் கனவு நனவாகி விட்டது. அவர் தம் பாட்டுத் திறத்தாலே நமக்கெல்லாம் ஆவேசத்தை யூட்டி நம்முள் உறங்கிக் கிடந்த சுதந்திர உணர்ச்சியைப் பீறிட்டு எழச் செய்தார்.

பாரதியார் சுதந்திர உணர்ச்சியை மட்டும் ஊட்டி நமக்குக் களிப்பை உண்டாக்கி விடவில்லை. அவர் மக்கள் கவிஞராக வாழ்ந்தார். வாழ்வின் பல கோணங்களைப் படம் பிடித்து அழகிய பாக்களின் மூலம் காட்டினார். யதார்த்த வாழ்வோடு ஒட்டிய நிதர்சனத்திற்கு முக்யத்வம் கொடுத்தார். "வாழ்வாவது மாயம், அது மண்ணாவது திண்ணம்" என்று சொல்லிக்கொண்டு கஞ்சாப் பரதேசிகள் நாட்டில் உலவிய காலத்தில் பாரதியார் பார்த்தார்; பதைத்தார். இந்த உலகம் பொய் என்று சொல்கிறார்களே. என்ன அறியாமை!

"நமக்குத் தந்தை வைத்துவிட்டுப்போன வீடும் வயலும் பொய்யா? தங்கச்சிலை போலே நிற்கிறாள் மனைவி. நமது துயரத்திற்கெல்லாம் கண்ணீர் விட்டுக் கரைந்தாள்; நமது மகிழ்ச்சியின் போதெல்லாம் உடல் பூரித்தாள்; நமது குழந்தைகளை வளர்த்தாள்; அவள் பொய்யா? குழந்தைகளும்பொய்தானா? பெற்றவரிடம் கேட்கிறேன். குழந்தைகள் பொய்யா?"

வரட்டு வேதாந்தம் பேசிய மனிதன் திகைத்து நிற்கிறான். "காண்பதுவே உறுதி கண்டோம், காண்பதல்லால உறுதியில்லை" என்று அவன் உதடுகள் பாட்டிசைத்தன.

இன்னும் இதுபோல எத்தனையோ சொல்லலாம்.

அவருடைய அரிய கவிதைகளைப் படித்து அந்த இன்பத்தில் திளைத்த நண்பர் கே. பொன்னுசாமி அவர்கள நமக்கு இந்த இனிய நூலைத் தந்துள்ளார்கள். 'மயிலன்' என்ற புனைபெயரில் ஏராளமான சிறுகதைகளும் அழகிய

நாவல்களும் எழுதியுள்ளார்கள். நூல்வடிவில் இதுவே முதலாவதாக வெளிவருகிறது.

பாரதி பாடலின் விமர்சனம் ஒன்றை வெளியிட வேண்டுமென்றிருந்த நீண்ட நாள் ஆசை இன்று பூர்த்தி அடைந்தது. தமிழர்களின் நினைவில என்றுமே மங்காத புகழுடன் நின்று நிலவும பாரதியின் புகழ் மறவாமல் இருகக இந்தச் சிறுநூல் ஒரு தூண்டுதலாக இருக்குமல்லவா?

இத்துடன் என்னுரையை முடிக்குமுன் பாட்டுக்கொரு புலவன பாரதிக்கு ஒரு பாட்டைப் பாடி முடிப்போம்.

இதோ நமது நாமக்கல் கவிஞர் பாடுவதைக் கேளுங்கள்.

"எங்கேயோ எட்டாத உலகம் தம்மில்
இருப்பரென நாம்படித்த தெய்வம எல்லாம்
இங்கேயே எம்முடனே எவருமகாண
ஏழைமக்கள குடிசையிலும் இருப்ப தாக்கும்
சிங்காரப் புதுக்கவிகள் பலவும பாடித்
தேவரெல்லாம தமிழ்நாட்டில் திரியச் செய்தோன்
மங்காதாம பாரதியார் நினைவைப் போற்றி
மறவாமல் தமிழ்நாட்டார் வாழ்த்த வேண்டும்."

நாகை,
12-3-54.

தோ. ந. வீரராகவன்,
இமயப பதிப்பகம்.

# முகவுரை

நம் தமிழ் நாட்டு இலக்கிய விமர்சனம் 'என்ன அழகு! என்ன நயம்!' போன்ற வெறும் வியப்புக் குறிகளாய்த் திகழ்கின்றது. ஆனால் திரு கே. பொன்னுசாமி அவர்கள் பி ஏ., எழுதிய **"பாட்டுக்கொரு புலவன்"** என்னும் ஒரு சிறிய நூலைப் படிக்கும்பொழுது ஒரு தனி உணர்ச்சி நம் அகத்தில் பாயுமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இவ்வாசிரியர் பாரதியார் நூல்களின் நயங்களைப் பருகிப்பருகி அவைகளில் காணப்படும் சிறப்புக்களைத் தக்க சான்றுகள் கொண்டு துருவி ஆராய்ந்து நமக்கு நல்கியிருக்கிறார். இந்நூலைத் தமிழுலகம் ஏற்காமற் போகாது.

பண்டிதர்கள் கவிதைப் பூவைக்கசக்கி முகர்கின்றனர். அது தக்கதன்று என்று ஆசிரியர் கூறும் விஷயம் இங்கு நோக்கத்தகுந்தது.

'பூவைக் கசக்கி முகரக்கூடாது. அதைப்போல் கவிதையையும் சிதைக்காமல் அதன் ரசபாவம் கெடாமல் சுவையறிந்து நாசூக்காக அனுபவிக்க வேண்டும்.'

பண்டிதர்கள் சொற்சிலம்பம் பழகாமலில்லை. ஒரு சொல்லிற்குப் பல்லாயிரம் பொருள்கூறிக் 'கவிதையின் அகவுயிரைக் காணமற் போய்விடுகின்றனர். இது மிகவும் விசனிக்கத் தகுந்ததே. 'கவிஞனின் கற்பனை' 'கவிஞனின் வர்ணனை' **'உவமை நயம்' 'சக்திதாஸர்' 'அவர் வழி'** முதலிய விஷயங்களை இவர் நுணக்கமாய் அலசியிருக்கும் தன்மை நம் உள்ளத்தைக் கவர்கின்றது.

பாரதியாரின் மனத்தின்—அகவுயிரின்—படிப்படியான வளர்ச்சியைச் சிற்சில வாக்கியங்களில் இவ்வாசிரியர் மிகக் கவின்பெறக் காட்டிவிட்டார். இது போற்றத்தகுந்தது.

'பாரதியார் தேசபக்தராய் அரும்பிக் கவிஞராய் மலர்ந்து வேதாந்தியாகப் பழுத்தவர். அவர் வாழ்க்கை தேசபக்தி, கவிதாசக்தி, தெய்வபக்தி, இம்மூன்றும் கூடிய திரிவேணி சங்கமம். பழம் பழமையும் புதுப் புதுமையும் ஒன்றையொன்று தழுவி இடம்கொடுத்து ஐக்கியம்பெற்ற தோர் அற்புதம்.'

இதுபோன்ற தமிழ்க் கைங்கரியத்தைத் இவர் புரியும் பொருட்டு எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

திருவல்லிக்கேணி,
4—10—54.

**ரா. ஸ்ரீ. தேசிகன்.**

# பாட்டுக்கொரு புலவன்

பாட்டு இனிமையோடு பிறக்கிறது. பிறந்து, காற்றுத் தேவனின் தோளில் அமர்ந்துகொண்டு, எல்லாத் திசையிலும் சவாரி செய்கிறது. இந்தப் பாட்டை அவன் கேட்டான்; திடுக்கிட்டு, மலைத்து நின்றுவிட்டான். காதின் வழியாகத் தேனைப் பாய்ந்த பாட்டிலே அவன் உள்ளமும் சொக்கிச் சிக்கிவிட்டது.

ஹிந்திமெட்டில் அமைந்த சினிமா பாட்டல்ல அது. பாரதி பாட்டு.

பட்டணத்துக்குப் புதிதாக வந்தவன். கண் கொள்ளாக் காட்சிகளையெல்லாம் விழி இமைக்காமல் பார்த்துக்கொண்டு வந்தவன். இப்படி பிரமிப்போடு வந்தவனை அந்தப் பாட்டு என்னவோ செய்து விட்டது. அவன் கிறுகிறுத்துப் போனான்!

அதிசயத்திலும் அதிசயம் இது. இந்த அற்புதத்தைத் தனக்குள்ளேயே வைத்துக்கொள்ள அவனால் முடியவில்லை. கிராமத்துக்குத் திரும்பினான். தன் கூட்டாளியிடம் கூறுகிறான் தான் கண்ட அதிசயத்தை,

"பாட்டுக் கொருபுலவன பாரதி, அடா!—அவன்
பாட்டைப் பண்ணேடொருவன் பாடினான், அடா!
கேட்டுக கிறுகிறுத்துப போனேனே, அடா!—அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாய், அடா!"

என்று அந்த அதிசய பரவசத்திலேயே!

அவன் பட்டிக்காட்டான்; கேட்டவுடன் கிறு கிறுப்பு ஏற்பட்டுவிட்டது என்று லேசாக எண்ணி விடவேண்டாம். நகரத்திலே, இன்னும் பெரிய பட்டணத்திலே வாழுகிற நாகரிகக் கூட்டத்தையும் கிறு கிறுக்க அடிக்கவைக்கும் தன்மை உள்ளதுதான் பாரதியின் பாட்டு. இல்லாவிட்டால், நம் கண்முன்னுல் இன்று காண்கிறேமே, இந்த பாரதியுகம் ஏற்பட்டிருக்க முடியுமா?

'பாட்டுக்கொரு புலவன் பாரதியடா' என்று ஓர் உத்தம கவிஞர் தம் காலத்தில் வாழ்ந்த மற்ருெரு கவிஞரைக் பட்டிக்காட்டான் வாய்மொழியாகப் புகழ்ந்திருக்கிருர்! நிறைந்த மொழிகள்! மந்திரம் போன்ற சொற்கள்! மறக்கமுடியாத வார்த்தைகள்!

பாட்டுக்கொரு புலவன் என்ற புகழ்பெற்ற பாரதியார் இப்பொழுது நம்மிடையே இல்லை. அவர் பூத உடலை நீத்து அமரத்துவம் எய்திவிட்டார். அவரை அமரகவி என்கிறேம். தென்னுட்டில், ஒருவர் இறந்துவிட்ட செய்தியை, சிவலோக பிராப்தி அடைந்தார், வைகுண்ட பதவி பெற்ருர், விண்ணுலகு எய்தினர் என்றெல்லாம் குறிப்பதுண்டு. வடநாட்டிலே, இறந்துபோன ஒருவரைக் கைலாஸ வாசி என்றும் வைகுண்டவாசி என்றும் குறிப்பிடுகிருர்கள். அதுபோல, அழியாத சொற்களால் கவிதைகளும் பிற இலக்கிய வகைகளும் நாட்டிச்செல்லும் இலக்கிய கர்த்தாக்களையும், அரசியல் முதலிய துறைகளில் தீரவீரச் செயல் புரிந்து மறைந்த பெருமக்களையும் அமரத்துவம் அடைந்தார்கள் என்பது வெறும் உபசாரம் அல்ல. செய்கையால் புகழை நிறுவியவர்கள் விஷயத்தில் அமரத்துவம் முழு உண்மையாக இல்லாமல், ஓரளவில், ஒரு விதத்தில் உண்மையாக இருக்கலாம். ஆனுல் கவிஞர்கள் முதலிய இலக்கிய கர்த்தாக்கள் விஷயத்தில் அது முழு

உண்மை. அவர்களுடைய இறவாத சிருஷ்டிகள் நம் முன்னல் எழுத்தாக, கருத்தாக, காட்சியாக விரிந்து நிற்கின்றனவே! அவைகளில் அவர்கள் சிரஞ்சீவிகளாக வாழ்கிருர்களே!

பாரதியார் அத்தகைய அமரகவி. அவருடைய கவிதையில் அசாதாரண எளிமையும் அற்புத கவர்ச்சியும் சொற்பொருள் நயங்களும் மிகுந்து காணப்படுகின்றன. எளிமை நிறைந்த கவிதைகள் என்பதால், உள்ளீடு இல்லாத வெள்ளைக் கவிதை கள் என்று யாராவது நினைத்தால் அது பெருந் தவறு. உதாரணத்துக்கு ஒன்று சொல்லுகிறேன்: குயிலின் விசித்திர காதல் கதையை எளிய நடையில் விவரித்துக் கொண்டு வந்து, அந்தக் குட்டிக் காவியத் தின் இறுதியில்,

> ஆன்ற தமிழ்ப் புலவீர்! கற்பனையே யானலும்
> வேதாந்த மாக விரித்துப் பொருளுரைக்க
> யாதானுஞ் சற்றே இடமிருந்தாற் கூறீரோ?

என்று கேட்கிருர் கவிஞர். இந்தக் கேள்விக்கு எளி தில் விடை தரமுடியுமா?

கவிதை என்பது மென்மையான சரக்கு. பூவைப்போல் மென்மை உடையது. இன்னும் சரி யாகச் சொன்னல் பூவைக் காட்டிலும் பன்மடங்கு மென்மையுள்ளது. அடியால் 'மிதியுண்டு படியாகக் கிடக்கும் கல்லுக்கும் ஒரு மல்லிகை மலருக்கும் மென் மையில் எத்தனை வித்தியாசம் உண்டோ அத்தனை வித்தியாசம் அந்த மலருக்கும் கவிதைக்கும்!

பூவைக் கசக்கி முகரக்கூடாது. அதைப்போல் கவிதையையும் சிதைக்காமல், அதன் ரசபாவம் கெடாமல், சுவையறிந்து நாசுக்காக அனுபவிக்க வேண்டும். இங்கே ஒரு நிகழ்ச்சி ஞாபகத்துக்கு வரு கிறது: ஏழெட்டு பேர்கள் கூடிய ஒரு கூட்டம்;

இலக்கிய ரசிகர்கள் கூட்டம். இவர்கள் இப்படிக்கூடி இலக்கிய அழகை அடிக்கடி அனுபவிப்பதுண்டு.

அன்று கம்பராமாயணம் வாசித்தார்கள். விஸ்வாமித்திர மகரிஷி தசரதன் சபைக்கு வந்து, யாகத்தைக் காக்க, 'நின் சிறுவர் நால்வரிலே கரிய செம்மல், ஒருவனைத் தந்திடுதி' என்று ராமனை உதவிக்கு அனுப்பும்படி கேட்கிறார்.

தவமுயன்று அரிதிற் பெற்ற பிள்ளை; பட்டத்துக்குரிய மூத்த மகன். அவனை ராக்ஷஸர்களோடு போர் புரிய வேண்டும் என்கிறார் முனிவர். தசரதனுக்கு எப்படி இருக்கும்? அவனுடைய நிலையைத்தான் கம்பர் வர்ணிக்கிறார். அப்பொழுது விஸ்வாமித்திரரைக் குறிப்பிடும்போது 'எண்ணிலா வருந்தவத்தோன்' என்கிறார்.

இந்த இரண்டு சொற்கள் வலையாக அந்த 'ரசிகர்'களுக்கு அகப்பட்டுக்கொண்டு விட்டன. பிரித்துப் பிரித்து, விதவிதமான அர்த்தங்கள் சொல்லுகிறார்கள். 'எண் + இலா + அரும் + தவத்தோன்' என்றும் 'எண் + இல் + ஆ + வரும் + தவத்தோன்' என்றும் 'எண்ணில் + ஆ! + அரும் + தவத்தோன்' என்றும் பதச் சேதம் நடைபெறுகிறது. அறிவைக் கொண்டு நடத்தும் இந்தச் சத்திர சிகிட்சையில், தசரதனை மறந்துவிட்டார்கள்; அவனுடைய துயரத்தை மறந்துவிட்டார்கள்; கம்பரைக் கூட மறந்துதான் போயிருக்கவேண்டும்.

அவர்களில் ஒருவர் 'என் + நில் + ஆ! + அரும் தவத்தோன்' என்று இரண்டு சீர்களிலே இரண்டு முழு வாக்கியங்களையும் ஒரு குறை வாக்கியத்தையும் கண்டு ஆனந்தித்தால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை! 'நயந்தெரிந்து கதை நடத்தும் நாடகக் கவிஞர் கம்பர்' என்பது அவருக்குத் தெரிந்திருக்கும் அல்லவா!

மேற்படி ரசிகர்களில் ஒருவர் கையில் பாரதியாரின்,

மண்ணி லார்க்கும் துயரின்றிச் செய்வேன்
வறுமை யென்பதை மண்மிசை மாய்ப்பேன

என்கிற அடி சிக்கிக்கொள்ளுமானல், என்ன பாடு படுமோ? 'எண்ணிலா வருந்தவத்தோன்' உள்ளான அத்தனை ரண சிகிச்சைக்கும் 'மண்ணி லார்க்கும்' என்னும் இரண்டு சீர்களும் ஈடுகொடுக்கவேண்டும்! இப்படிப்பட்ட கோடாலிப் பிளப்புகளில் மனதையும் பொழுதையும் செலுத்துகிறவர்களுக்கு, 'துயரின்றிச் செய்வேன்', 'மண்மிசை மாய்ப்பேன்' என்பதில் உள்ள முரண் என்னும் அலங்காரம் முழுவதும் கண்ணில் படுமா என்பது சந்தேகந்தான்.

கவிதையை பாவம் அறிந்து இருதயத்தால் வாசித்து ரசிக்கவேண்டும். கவிதையின் பாவத்தை நன்ருய் உணர, சொல்லின் பொருளைப்போல் அதற்குரிய ஒலியும் பெரிதும் உதவிபுரிகிறது. எனவே, சொற்களை உரிய சந்தத்தில் இசையோடு வாசித்தால், சந்தக் குழைவிலே வந்துவிழும் அழகுகளை அனுபவிக்கமுடியும். உதாரணமாக,

வளருவன் தனை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அளளும சிலபபதி காரம என் ேறா மணி
யாரம் படைதத தமிழ்நாடு.

என்பதில் சிலப்பதி—காரம், ஓர்மணி—யாரம் என்று வருகிற எதுகை அழகை, பாட்டைப் பாட்டாகப் பாடிஞல் அன்றி எப்படிக் காணமுடியும்?

தமிழ்ப் பெரியார் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் சொல்லியுள்ளதுபோல், கர்த்தபக் குரலாளுலும் பாட்டைப் பாட்டாகத்தான் பாடவேண்டும். 'எனக்குக் குரல் கிடையாதே' என்று வெட்கப்பட்

டால், பாட்டின் சுவையை முழுவதும் அனுபவிக்க முடியாது. அப்படிப் பாடிப் பழகினால், கர்த்தபக் குரலும் கொஞ்சநாளில் கந்தர்வ குரலாக மாற மார்க்கம் உண்டு.

கவிதையைப் பக்தி சிரத்தையோடு பயிலவேண்டும். சிரத்தையையும், பக்தியையும் சேர்த்தே பேசுவது நம்மவர் வழக்கம். சிரத்தை மட்டும் இருந்தால் போதாதா என்று கேட்கலாம். போதும். வெற்றி கிட்டவும் செய்யும். ஆனால், அத்தோடு பக்தியும் சேர்ந்துகொண்டால், வெற்றி சுலபம்; சீக்கிரம். இங்கே ஒரு விஷயம்: இந்த பக்தி அறிவின் தோழமையுடையதாய் இருக்கவேண்டும். அளவில் கொஞ்சமானாலும், உண்மையான, இருதய சம்பந்தமான பக்தியாய் இருக்கவேண்டும். வெறும் மூடபக்தி, தெய்வத்தைக் காட்டாது; உள்ளே இருக்கும் ஆன்மாவைக் காட்டாது; தன்னைத்தான் காட்டிக் கொண்டு நிற்கும்!

மந்தி ரத்தை முணுமுணுத்த தேட்டை
வரிசை யாக அடுக்கி அதன்மேல்
சந்த னத்தை மலரை இடுவோர்
சாத்தி ரமிவள் பூசனை அன்றும்

என்பது பாரதியாரின் எச்சரிக்கை.

கடைசியாக, அருமையாகத் தோன்றி மனித இனத்துக்காக இன்பக்கனவுகளை, அற்புத கனவுகளைக் கண்டு உயிருள்ள கவிதையாகப் பொழியும் கவிஞர்களை நன்றாக மக்கள் எல்லாம் போற்றவேண்டும். கவிதையும் கவிஞர்களும் எங்கே போற்றப்படுகிறார்களோ, அங்கே கலை வாழ்கிறது; நாகரிகம் செழிக்கிறது; ஒன்றுக்கு ஒன்று உயர்ந்துநிற்கும் இலக்ஷிய அடுக்குகள் வாழ்க்கைக்கு ஒளியை வழங்குகின்றன. வாழ்க கவிதை! வாழ்க கவிஞர்கள்! வாழ்க பாரதி!

# கவிஞனின் கற்பனை

பாரதி என்னும் பொதுப் பெயரைத் தமக்கே உரிய தனிப்பெயர் ஆக்கிக் கொண்டு தமிழர்கள் நெஞ்சிலும், ஓவிய உருவிலும், உயர் நிலை மாடத்திலும் உயிர்த்து, நின்று, நிலைபெற்று அமரராக வாழுபவர் நம் கவி பாரதியார். இவர் ஸ்தூல சரீரத்தோடு தமிழரிடையே நடமாடிய காலத்தில், இவருக்குரிய முழுப் பெருமையையும் புகழையும் தமிழுலகம் கொடுத்துப் போற்றத் தவறிவிட்டது. இது ஒரு விசித்திரம் அல்ல! கிருஸ்து, முகம்மது, புத்தர் போன்ற பெரியோர்களும் இந்தக் கதிக்கு முதன் முதலில் ஆளாகத்தான் செய்தார்கள்!

பாரதியார் ஒரு கவிஞரா என்கிற சந்தேகம் கூட அந்தக் காலத்தில் தமிழ் நாட்டில் தமிழ் அறிந்த பண்டிதர்களுக்குள்ளே நிலவி வந்தது. இவருடைய பாட்டுகளில் இலக்கணப் பிழை இருக்கிறது என்றும் பொருள் ஆழம் இல்லாத வெள்ளைப் பாட்டுக்கள் என்றும் ஏதேதோ சொல்லிக் கொண்டு இவரிடம் உதாசீனம் காட்டினார்கள் அவர்கள். இந்தக் கொடுமையை உணர்ந்த பாரதியாரும் தம் எண்ணத்தை வெளியிடாமல் இல்லை. பண்ணளவு உயர்ந்த தம்முடைய இசைப் பாடல்களையும் பா அளவு உயர்ந்த கவிதைகளையும் 'தமிழ்நாடே! விழித்து நோக்கு! அறிவும் அன்பும் ஆண்மையும் கொள்!' என்று தட்டி எழுப்பிக்காணச் செய்தார். 'சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொற் புதிது, சோதி மிக்க நவ கவிதை, எந்நாளும் அழியாத மகா கவிதை' என்று தம் கவிதையைப் பற்றித் தாமே விளம்பரம் செய்தார்.

உண்மையான உயர்வு யார் மூலமாகவாவது வெளிப் படத்தான் செய்யும்.

உணர்ச்சி மிகுந்த கவிஞன் ஒருவனுக்குத் தன் பெருமையைத் தானே கூறுவது என்பது ஓரளவுக்கு மனக் கஷ்டத்தைத்தான் தந்திருக்கும். என்ன செய்வது? தமிழர்கள் கடமையில் தவறிய குற்றம்; கவிஞர் தம் பெருமையை, தகுதியைத் தாமே வெளியிட வேண்டியதாயிற்று. குயில் பாட்டில் வரும் விசித்திரக் குயில் தன் காதலை வாய்விட்டுச் சொல்லித் தெரிவிக்க வில்லையா? அதுபோல்தான்!

தமிழ்த் தாயின் தவப் புதல்வர் பாரதியார். கருவிலே திருவுற்று இருங்கலைப் புலமை பெற்ற கவிஞர் இவர். இவருக்கு ஒன்பதாவது பிராயத்திலேயே கவிதா தேவி அருள் புரிந்து, தெய்வ பக்தியையும் தேச பக்தியையும் நாட்டு மக்களுக்கு ஊட்ட வேண்டும் என்று பணித்தாள். அந்தப் பணியை இவர் அன்று முதல் உடலோடு வாழ்ந்த கடைசி நாள் வரை நன்றாக ஆற்றி இருக்கிறார். அப்பணிக்கு இடையூறாக எத்தனையோ தொல்லைகள் முளைத்தன. அவைகளை எல்லாம் நெஞ்சுறுதியோடு நீக்கி, அன்னையிட்ட பணியிலே முன்னைவிட அதிக ஊக்கத்துடன் ஈடுபட்டு வந்தார். இச் செய்தியைத்தான்,

நமக்குத் தொழில் கவிதை நாட்டுக் குழைத்தல்
இமைப்பொழுதுஞ் சோரா திருத்தல்—உமைக்கினிய
மைந்தன் கணநாதன் நமகுடியை வாழ்விப்பான்
சிந்தையே இம் மூன்றும் செய்.

என்கிற விநாயகர் நான்மணி மாலை வெண்பா குறிப்பிடுகின்றது.

கவிதா தேவியின் பூரண அருள் பெற்றுப் பிறந்த பாரதியார் கவிதையாலேயே உலகத்தை உய்விக்க வேண்டும் என்று உறுதி செய்து கொண்டார்.

*இந்த உறுதி இவருடைய பாடல்களில் பல இடங்களில் தென்படுகிறது.*

சுவை

நணணும பாட்டினொடு தாளம—மிக
நனறு உளத்தழுந்தல் வேணடும்—பல
பணணில் கோடிவகை இனபம்—நான்
பாடத் திறனடைதல் வேணடும

*என்பதும்*

பாட்டுக் கலந்திட வே—அங்கே ஒரு
பததினிப் பெணவேணும—எஙகள
கூட்டுக் களியினி லே—கவிதைகள்
கொணடு தரவே ணும—அநதக
காட்டு வெளியினி லே—அமமா நின்றன்
காவல் உறவே ணும—என்றன்
பாட்டுத திறத்தா லே—இவ்வையத்தைப்
பாலித திடவே ணும

*என்பதும்*

தசையினைத தீசுடினும்—சிவ
சகதியைப பாடுநல அகங்கேட்டேன்

*என்பதும்*

புகழ்சேர் வாணியும்
என்னுள்ளே நின்று தீஙகவிதை
பெய் வாள்

*என்பதும்*

போறறி கலியாணி புதல்வனே பாட்டினிலே
ஆற்றல அருளி அடியேனைத்—தேற்றமுடன
வாணிபதம் போறறுவிதது வாழவிபபாய் வாணியருள்
வீணையொளி எனனுவில விணடு

*என்பதும் சில உதாரணங்கள்.*

*ஜீவிய காலத்தில் இவரைக் கவனிக்காமல் விட்டு வைத்த தமிழ்நாடு, இவர் இறந்த பிற்பாடும் உதாசீ*

னப் போர்வையில் முடங்கிக் கிடந்து உறங்கிப்போகாமல், விழிப்படைந்து இவரிடம் கவனம் செலுத்தத் தொடங்கியது. அது காரணமாக, தமிழ் நாட்டில் அங்கங்கே அவருடைய உருவச் சிலைகள் எழுந்தன. ஓவியர்கள் இவர் படத்தை வரைந்து வீட்டிலும் கடையிலும் வேறு இடங்களிலும் அழகுற அமைத்தனர். சங்கங்களும் கழகங்களும் பாரதி என்னும் இவர் பெயரைத் தொடர்பு படுத்திக் கொண்டு முளைத்து எழுந்து நிலைத்து நின்றன. இன்னும், கூட்டங்கள் கூடுவதும் பிரசங்கங்கள் நடைபெறுவதும் நிகழலாயின. இதற்கெல்லாம் சிகரம்போல, சில வருஷங்களுக்கு முன், 'கல்கி' போன்ற ரசிகர்களின் கூட்டு முயற்சியால் எட்டையாபுரத்தில் பாரதி மண்டபம் எழுந்தது.

பாரதியாரின் ஞாபகார்த்தமாக எத்தனையோ கொண்டாட்டங்கள் இப்பொழுது! இவரைச் சிறப்புறுத்த எவ்வளவோ பொதுக்கூட்டங்கள்! சொற்பொழிவுகள்! பத்திரிகை உலகில் அழகான, சிறப்பான தனி வெளியீடுகள்!

இவை எல்லாம் நல்லதுதான். எனினும் இன்னும் சில வேண்டும். பாரதியாரின் ஸ்தூல வாழ்க்கையைப் பற்றிய செய்திகளும் அவற்றின் விளக்கங்களும் இவர் சரித்திரத்தில் தனியிடம் பெறவேண்டுவனவே. இவர் பட்ட துன்பமும், கொண்ட துயரமும், கண்ட இன்பங்களும், எடுத்த முயற்சிகளும், இவைபோன்ற இன்னும் பலவும் நமக்குத் தெரிய வேண்டும்தான். ஆனால், இத்தோடு நாம் நின்றுவிடலாமா? இவைகளுக்கெல்லாம் மேலாக, இவர் கவிதையில் நேரே ஈடுபடுதல் மிகமிக அவசியம்.

இவர் கவிஞர், இவர் அமரநிலை அடைந்திருப்பதும் கவிதை மூலமாகத்தான். அந்தக் கவிதையில் இவர் இன்றும் வாழுகிறார். அதை நன்றாய் ஊன்

றிப் படித்து, உணர்ந்து, அறிந்து பாரதியின் பூரண தரிசனத்தைப் பெறவேண்டும்.

பாரதியார் சிறந்த தேசபக்தராக வாழ்ந்தார். மிகுந்த தெய்வ பக்திகொண்டு வாழ்ந்தார். தம்மைச் சக்திதாசன் என்றும் காளிதாசன் என்றும் அழைத்துக் கொண்டார். விரிந்து பரந்த தத்துவ ஞானமும் இவருக்கு இருந்தது. எனினும் இவர் இன்று நம்மிடையே வாழ்வது தேசபக்தனுக அல்ல; சக்திதாசனுக அல்ல; தத்துவ ஞானியாகவும் அல்ல. இவரை நாம் கவிஞர் என்று போற்றுகிறோம். இவருடைய தேசபக்தியும் தெய்வ சிந்தனையும் தத்துவ ஞானமும் கவிதா விலாசம் பெற்று அமரத்துவம் எய்திய இவருடைய அம்சங்களே!

ஆம், பாரதியார் முற்ற முழுக்க ஒரு கவிஞர். மற்றது எல்லாம் அதற்குப் பின்தான்.

கவிதை உலகிலே பாரதியாருக்கு உள்ள இடம் என்ன என்பது அடுத்தபடியாக எழுகிற கேள்வி. கம்பரும், வள்ளுவரும், ஒட்டக்கூத்தரும் ஜயங்கொண்டாரும், இளங்கோவும், திருத்தக்க தேவரும் பிறந்து கவிமழை பொழிந்த நாட்டில் பாரதியும் பிறந்து கவிமழை பொழிந்தார். அவர்களுக்கு இருந்த ஆற்றலும் கவிதா உன்னதமும் இவருக்கும் இருக்கின்றன. இந்த உண்மையின் தரிசனந்தான்

புவியனைத்தும போற்றிடவான்
புகழ்படைத்துத் தமிழ்மொழியைப் புகழில் ஏற்றும்
கவியரசன் தமிழ்நாட்டுக்
கில்லையெனும் வசைஎன்னால் கழிந்த தன்றே!

என்ற பாரதி வாக்கு ஆதாரமாக நிற்கின்றது.

ஒரு கவிஞனின் தரத்தை, அவன் திறத்தை அறிவதற்கு அவனுடைய கவிதைகள்தான் சரியான கருவி. கவிதைகள் அவனுடைய கனவு அல்லவா?

இந்தக் கனவுகளின் உயர்வுதானே கவிஞனின் உயர்வுக்கு அளவுகோல்!

கவிஞன் காணும் கனவுதான் அவன் கவிதை. ‘சாதாரண மக்கள் கூடக் கனவு காண்கிறார்கள். ஷேக்ஸ்பியர், டாண்டே போன்ற கவிசிரேஷ்டர்களும் கனவு காண்கிறார்கள். பின் ஏன் சாதாரண மக்கள் கவிஞர்கள் ஆவதில்லை? காரணம், ஒரு சிறு பேதம். அவர்கள் கனவு விழிப்பு நிலையில் காணும் கனவு. இவர்கள் கனவு தூக்கத்தில் காணும் கனவு’ என்று கூறினான் ஒரு மேல்நாட்டு அறிஞன்.

கனவு காணும் சாதாரண மக்கள் ஒரு சிறு கால வித்தியாசத்தால் கவிஞர்களுக்கு உரிய பெருமையை இழந்துவிட்டு நிற்கிறார்கள்! சரியான வார்த்தை சொன்னான் அந்த அறிஞன்!

வாஸ்தவந்தான். அறிவு இடம் பிறழ்ந்து, தடம் புரண்டு குழம்பி நிற்கும் நிலையிலே காணும் அற்ப காட்சிகள் சாதாரண மனிதனின் கனவுகள். கவிஞன் காணும் கனவுகளோ, பட்டப் பகலில் விழிப்பு நிலையில் சிந்தனையும் கற்பனையும் ஒன்றாய்ச் சேர்ந்து ஊடுருவிக்காணும் அற்புதக் காட்சிகள்.

முன்னிக கவிதைவெறி மூண்டே நனவழியப்
பட்டப பகலிலே பாவலாகருத் தோன்றுவதாம்
நெட்டைக கனவு

என்று கவிதை அழகு பொருந்தப் பாரதியார் வர்ணிப்பதும் இந்த அற்புதக் காட்சிகளைத்தானே!

இத்தகைய அற்புதக் காட்சிகள் பாரதியாருக்கு எத்தனையோ ஏற்பட்டன. அவைகளை எல்லாம் இவரும் உயிருள்ள சொல்லில், உணர்ச்சி பொங்க நடக்கு எடுத்துரைக்கிறார். உதாரணத்துக்குச் சில வற்றைப் பார்க்கலாம்.

சிந்து நதி கம்பீரமாக ஓடுகிறது. இரவு நேரம். பூரண சந்திரன் வானிலிருந்து வெள்ளி நிலவைக் கொட்டிப் பூமிக்கு அபிஷேகம் செய்து களித்துக் கொண்டிருக்கிறான்.

நதி நிறைய பிரவாகம். அதில் ஒரு சின்ன வண்ணப் படகு. படகிலே இருவர், யுவனும் யுவதியுமாக.

அந்த யுவன் ஒரு தமிழன், யுவதி சேர நாட்டுக்காரி. அழகான சூழ்நிலை. நல்ல சேர்க்கை. இன்பம் கொள்ளை போகாதா? சந்தோஷம் உள்ளத்தில் பொங்கிப் புரண்டு பெருக்கெடுத்துப் பாட்டாக வெளிப்படுகிறது. அந்தக் களிப்பாட்டுக்குப் பாஷையாகச் சுந்தரத் தெலுங்கு கைகொடுக்கிறது!

சிந்து நதியின் மிசை நிலவினி லே
சேரநன் னாட்டிளம் பெண்களுட னே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிகள் ஓட்டிவிளை யாடிவரு வோம்.

இந்த அழகிய சித்திரத்தில் அகண்ட பாரத தேசத்தை இணைக்கும் நாம் காணுகிறோம். சொல்லின் வலிமை அத்தகையது!

இன்னொரு காட்சி:

கம்பர் கோதாவரியைக் காண்கிறார். அதன் நீரோட்டத்தைக் கவனிக்கிறார். கற்பனைகள் கருத்தோடு பின்னிக்கொண்டு உள்ளத்தில் உதிக்கின்றன, இராம லக்ஷ்மணர்கள் கோதாவரி தீரத்தை அணுகியதைப் பயன்படுத்திக்கொண்டு தம் கற்பனைகளைக் கொட்டுகிறார்.

புவியினுக் கணியாய் ஆன்ற
பொருள் தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி
ஐந்திணை நெறி அளாவி

சவியுறத் தெளிந்து தண்ணென்
றொழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்.

என்பது கம்பர் கவிதை.

இந்தக் கோதாவரி ஆற்று வர்ணனையில் கவிதையின் இலக்கணத்தை அறிவது தமிழர் பாக்கியந்தான்.

கம்பர் கோதாவரியைப் பார்த்ததுபோல் பாரதியார் கங்கையைக் காணுகிறார். விண்ணுக்கு அடங்காமல், வெற்புக்கு அடங்காமல், மண்ணுக்கு அடங்காமல் தெய்வலோகத்திலிருந்து இறங்கிய கங்கை வேகம் தணிந்து, அமைதிகொண்டு, நிலத்தில், போட்ட கரைக்குள் அடங்கி ஓடுகிறது. அதன் இரு கரையிலும் உள்ள நிலங்கள் விளைவு மிகுந்து செல்வம் பெருக்குகின்றன. செல்வம் மட்டுமா உண்டாயிற்று? தருமமும் அத்தோடு தழைத்தது என்று கண்டு சொல்லுகிறார் பாரதியார்.

தானபோம வழியெல்லாம தன்மமொடு பொன்
விளைக்கும
வான்போந்த கஙகை.

என்பது இவருடைய கவிதை மணிவாக்கு.

மற்றொரு காட்சியைப் பார்ப்போம்:

பீஜித் தீவு. அதில் ஒரு கரும்புத் தோட்டம். அந்தத் தோட்டத்தில் இந்திய மங்கையர் கூலி வேலை செய்கிறார்கள். வேலை செய்தால் கூலி என்கிற கூலி வேலை அல்ல அது. அடிமையாய், செக்கு மாடாய் உழைக்கும் நிர்ப்பந்தம் அவர்களுக்கு.

யஜமானன் மானவன் அல்ல; மிருகம்-இல்லை, ராக்ஷசன் - படாதபாடு படுத்துகிறான் இந்த ஏழைக்

கூலி மாதர்களை. அடியும் உதையும் வசவும் பசியும் அவர்களுக்கு நித்திய அனுஷ்டானங்கள்!

அவர்கள் கண்ணீர்விட்டு அழுகிறார்கள்; கதறு கிறார்கள். காலும் கையும் சோர்ந்து சோர்ந்து விழுகிறார்கள். நெஞ்சு கொதிக்கிறது; மெய் சுருங்கு கிறது. என்ன கஷ்டம்! என்ன தொல்லை!!

'ஐயோ! நம் நாட்டைவிட்டு இந்த நாட்டுக்கு, கண்ணற்ற இந்தத் தீவுக்கு ஏன் வந்தோம்?' என்று நினைத்து மனம் சிந்தி உளம் நைந்துபோகிறார்கள். 'எப்பொழுது நம் நாட்டைத் திரும்பவும் காண் போம்?' என்று எண்ணி ஏங்கிப் பெருமூச்செறிந்து விம்மி அழுகிறார்கள்.

அவர்கள் படும் கஷ்டம் நம் பாரதியார் கண் ணுக்குப் பட்டுவிடுகிறது; பட்டு, கண்ணை உறுத்து கிறது. நெஞ்சு கொதித்து உணர்ச்சி கவிதையாக வெளிப்படுகிறது.

நாட்டை நினைப்பா ரோ?—எந்த
  நாள்இனிப் போயதைக் காண்பதென் றேஅன்னை
வீட்டை நினைப்பா ரோ?—அவர்
  **விம்மி விம்மி விம்மி அழுங்குரல்**
**கேட்டிருப் பாய்காற் றே**—துன்பக்
  கேணியி லேஎங்கள் பெண்கள் அழுதசொல்
மீட்டும் உரையா யோ?—அவர்
  விம்மி யழவும் திறங்கெட்டுப் போயினர்
    கரும்புத் தோட்டத்திலே.

அந்தக் கூலி மாதர்கள் விம்மி விம்மி அழுத குரலைக் கேட்கவேண்டியவர்கள் கேளாது போனா லும் காற்று நிச்சயம் கேட்டுத்தான் இருக்கும்!

'கரும்புத் தோட்டத்திலே' என்பதைப் பல்லவி யில் அமைத்துப் பாரதியார் பாடியிருப்பது 'கரும்புத்

தோட்டத்திலேயா இத்தனை கொடுமை! அந்த மனி தன் பாழாய்ப்போக!' என்று உணர்ச்சியைத் தூண் டிச் சாபமிடச் செய்கிறது!

பாரதியார் பெண் விடுதலையில் தீவிர ஆர்வம் கொண்டவர். இவர் படைத்த புதுமைப் பெண் ஒரு சிறந்த பெண்ணின் இலக்ஷியம். ஆணையும் பெண்ணையும் சமுதாயத்தின் இரு கண்களாகக் கண்ட இவர் பெண்ணுக்கு விடுதலை இல்லையானால், ஆணுக்கு விடுதலை என்பது பகற்கனவு என்பதை நிதர்சனமாகக் கண்டார். அவ்வாறே சொல்லியும் விட்டார்.

தாயாகவும் வாழ்க்கைத் துணைவியாகவும் வந்து வாழ்வு அளித்து இன்பம் ஊட்டும் பெண்மையின் இரு கூற்றையும் ஒரு பாட்டில் ஒருங்கே புகழுகிறார். அந்தப் பாட்டின் பகுதிதான் கீழே உள்ளது:

அன்னம் ஊட்டிய தெய்வ மணிக்கையின்
 ஆணை காட்டில் அனலை விழுங்குவோம
கன்னத தேமுத்தம கொணடு களிபபினும
 கையைத தள்ளுமபொற கைகளைப் பாடுவோம்.

பின் இரண்டு அடியிலே அழகான காதல் சித்திரம் உருவாகியிருக்கிறது!

மணிக்கையையும், பொற்கைகளையும் பாடியுள்ள பாரதியாரின் வாக்கு மணிவாக்குத்தான்; பொன் எனப் போற்றத்தக்க செஞ்சொல் தீங்கவிதைதான்!

வேறு ஒரு காட்சி :

பங்குனி மாதம். கோடை காலம். நல்ல வெய்யில் வேளை. கால் நடையாக வந்த கவிஞன் ஒருவன் வெய் யிலின் கொடுமைக்கு அஞ்சி, ஒரு தோட்டத்தில் புகுந்தான். புகுந்து ஒரு மரத்து நிழலில் உட்கார்ந்து இளைப்பாறலானான்.

மரம் பெரிய மரம். கொப்பும் கிளையும் இலையும் தளிரும் மலருமாகப் பம்பித்தழைத்து, அடர்ந்த நிழலை அடைந்தவர்க்கு எல்லாம் அளித்துக் கொண்டு நிற்கிறது. அது பயன் மரம்.

வந்த கவிஞன் அண்ணாந்து பார்த்தான். ஒரே பச்சை இலைப் பரப்பு: கீழே தரையைப் பார்த்தான். குளிர்ச்சியான நிழல்! அந்த நிழலைக் கண்ணையும் கருத்தையும் கூட்டிப் பார்த்தான். அவன் பார்வையில் நிழல் நாணமுற்ற பருவ மங்கை போல் தோற்றம் அளித்தது!

கவிஞன் ஒரு காதல் காட்சியை அங்கு அரைக் கணத்தில் கண்டுவிட்டான். அந்த நிழல் என்னும் பெண் கதிரவனின் அழகில் ஈடுபட்டு அவனிடம் மனதைப் பறிகொடுத்து நிற்கிறாள். நாணத்தோடு, தன் காதலை அடக்கமுடியாமல் அடக்கிக் கொண்டு நிற்கிறாள். இந்த மௌனக் காதலை மரத்தில் உள்ள மலர்கள் எப்படியோ அறிந்துகொண்டு புன்முறுவல் புரிகின்றன! விஷமக்கார இலைகளோ சலசலத்துத் தங்களுக்குள் இந்தக் காதலைப் பற்றி ரகசியப் பேச்சுப் பேசுகின்றன! பேச்சா அது? வம்புதான்!

இந்தக் காதல் காட்சியை, கவீந்திரராகிய ரவீந்திரநாத தாகூர் கவிதையாகத் தெரிவிக்கிறார். அது போலவே, பாரதியாரும் ஒரு காதல் காட்சியைக் காண்கிறார்.

உரையிறந்து பெருமை பெற்றுத் திரைக்கை நீட்டி ஒலிக்கின்ற கடலின் வெண்மணல் கரையிலே ஒருநாள் அதிகாலையில் கதிரவனை வழிபட வந்து நிற்கிறார் பாரதியார். செங்கதிர்ச் செல்வனும் காலம் தாழ்த்தாமல் கவிஞருக்குத் தரிசனம் தரக் குதித்தோடி வருகிறான். திரிபுரம் எரித்த ஒரு தனி முதல்வனின் விரிசடையைப் போல் சிவந்த கிரணங்களைத்

திக்கெல்லாம் செலுத்தி, ஒளிக் கடலாக உலகத்தை அடித்துவிடுகிறான் சூரியன்!

அவனைப் பார்த்த வண்ணம் நிற்கிறார் நம் பாரதியார். நேரம் ஆக ஆக, சூரியன் வானத்தில் ஏறிச் செம்மை மாறி வெம்மையும் வெண்மையும் கொண்டு திகழ்கிறான். அவனுடைய கிரணங்கள் ஈட்டிபோல் பூமியை நோக்கிப் பாய்கின்றன!

இதை உற்றுப் பார்க்கிறார் கவிஞர் பாரதியார். ஒரு காதல் காட்சி கண்முன் விரிகிறது. அது கவிதையாக மறு நிமிஷம் வெளிப்படுகிறது.

காதல் கொண்டனை போலுமண் மீதே
  கண்பிறழ் வின்றி நோக்குகின் றாயே
மாதர்ப் பூமியும் நின்மிசை காதல்
  மண்டி னாளிதில் ஐயமொன் றில்லை.
சோதி கண்டு முகத்தில் இவட்கே
  தோன்று கின்ற புதுநகை என்னே!
ஆதித் தாய்தந்தை நீவிர் உமக்கே
  ஆயி ரந்தரம் அஞ்சலி செய்வேன்

சூரியனுக்கும் பூமிக்கும் உள்ள காதல் தொடர்பிலே உலக சிருஷ்டியின் தத்துவ தரிசனமும் ஏற்பட்டுவிடுகிறது கவிஞருக்கு. 'ஆதித் தாய்தந்தை நீவிர்' என்று போற்றி 'ஆயிரந்தரம் அஞ்சலி செய்வேன்' என்று சொல்லி வணங்குகிறார்!

பாரதியார் சமத்துவக் கொள்கை உடையவர். அதைப் பிறரும் பின்பற்ற வேண்டும் என்று நினைத்தவர். பிறப்பாலும் தொழிலாலும் பிறவற்றாலும் உயர்வு தாழ்வு கற்பிப்பது பாபம் என்று சொல்லுகிறார்.

எல்லாத் தொழிலும் உயர்வுதான்; இழிந்த தொழில் என்று எதுவும் இல்லை என்பதுதான் இவர்

சித்தாந்தம். 'சந்தித் தெருப் பெருக்கும் சாத்திரம் கற்போம்' என்று மக்களைக் கூவி அழைத்தவர் அல்லவா ?

மேல் உலகத்திலிருந்து வானவர்கள் நம்மைக் காக்கிறார்கள் என்று நம்பினர் நம் பாரதியார். இவ்வுலகத்திலிருந்து கொண்டு நம்மைக் காப்பவர்கள் தொழிலாளிகள் என்பது இவர் கண்ட உண்மை.

எனவே தொழிலுக்கு இவர் தவறாத வணக்கம் செலுத்துகிறார். 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று பிறரையும் தொழில் வணக்கத்தில் ஈடுபடுத்துகிறார்.

தொழிலாளர்கள்தான் என்னென்ன செய்கிறார்கள்! இவ்வுலகத்தில் பாதிப்பொருள் இயற்கைப் பொருளானால் மறுபாதி செயற்கைப் பொருள். மண் இயற்கை; மண்ணால் ஆனகுடம் செயற்கை. மரம் இயற்கை; மேஜை செயற்கை. இரும்பு இயற்கை; இரும்பு உலக்கை செயற்கை. இப்படி இயற்கையோடு இயைந்து செயற்கைப் பொருள்கள் செய்யும் இந்தத் தொழிலாளர்களைக் கண்டு 'தேட்டமாக விழி எதிர் காணும் தெய்வமாக விளங்குவிர் நீரே!' என்று வியந்து போற்றுகிறார்.

இந்த வியப்பு இன்னும் மிகுந்து 'பிரமதேவன் கலை இங்கு நீரே!' என்று புகழும் உச்ச நிலையை அடைகிறது. 'பிரமதேவன் கலை' என்று தொழிலாளர்களை இவர் அழைப்பதில் கவிதை அழகு சொட்டுகிறது!

தொழிலை உயர்வாக இவர் கருதியபோதிலும், இரத்தத்தை வியர்வையாக வடித்து, வயிற்றுக்காக வருந்தி உழைக்கும் வெற்றுழைப்பை இவர் ஆதரிக்கவில்லை. பாழும் வயிற்றுக்காக இப்படியா மனிதன்

*மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்ந்து ஒரு பலனும் காணாமல் மாளவேண்டும் என்று வருந்தமுறுகிறார். உலகத்தில் மற்ற உயிர்கள் எல்லாம் சிறு உழைப்பிலேயே வயிறு வளர்க்கவில்லையா என்று எண்ணிப் பார்க்கிறார்.*

*இவ்விஷயமாகத் தாவரங்களின் ஞாபகம் வருகிறது இவருக்கு. சிந்தனையும் கற்பனையும் ஒன்றை ஒன்று தழுவிச் சேர, அழகான கவிதை ஒன்று பிறந்துவிடுகிறது!*

இந்தப் புவியினில் வாழும மரங்களும
இனப நறுமலாப் பூஞ்செடிக கூட்டமும்
அநத மரஙகளைச சூழ்ந்த கொடிகளும
ஔடத மூலிகை பூண்டுபுல் யாவையும
எந்தத தொழில செய்து வாழ்வனவோ?

*பின் ஏன் மனிதன் மட்டும்.........?*

*பாரதியாரை இன்னும் கேளுங்கள்:*

மானுடா உழாவிடினும வித்துநடா விடினும
வரமபுகடடா விடினும அன்றி நீரபாய்ச்சா விடினும
வானுலகு நீாதருமேல் மணமீது மரஙகள்
வகைவகையா நெறகள்புறகள் மலிந்திருக்குமன்றோ?
யானெதறகும அஞ்சுகிலேன மானுடரே நீவீர்
என் மதததைக் கைக்கொள்மின பாடுபடல்
[வேண்டாம்.
ஊனுடலை வருத்தாதீர் உணவியற்கை கொடுககும்
உங்களுக்குத் தொழில் இங்கே அன்புசெய்தல்
கண்டீர்!

*அன்பு இல்லை. அதனால்.........*

பேதமிட்டுக் கலகமிட்டு வேலி கட்டிப்
பின்அதற்குக் காவல்என்று பேரும் இட்டு
நீதமில்லாக களவாநெறி ஆயிற் றப்பா
நினைக்குங்கால் இதுகொடிய நிகழ்ச்சி அன்றோ?

அன்பு மார்க்கத்தை இதைவிட எவ்வாறு அழுத்தமாகத் தெரிவிக்கமுடியும்?

இப்படியாக எத்தனையோ அற்புதக் கவிதைக் காட்சிகளை நாம் பாரதியார் பாட்டுக்களின் மூலமாகக் காண்கிறோம். கடைசியாக ஒன்றைப் பார்த்து விட்டுக் கவிதையின் மற்றொரு முக்கிய பண்பைக் கருதலாம்.

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்—அதை
  அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு—தழல்
  வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?
    தத்தரிகிட தத்தரிகிட திததோம்!

அக்கினிக்குஞ்சால் பெருங்காடு எரிந்து சாம்பலாவதைக் கண்முன் காண்பது போன்ற பிரமை ஏற்படுகிறது அல்லவா?

அளையுறை பாம்பும் அரசும் நெருப்பும்
முழையுறை சீயமும் என்றிவை நான்கும்
இளைய எளிய பயின்றவென் றெண்ணி
இகழின் இழுக்கம் தரும்

என்பது ஒரு பழைய செய்யுள். இதில் சொல்லப்பட்டுள்ள உண்மையின் கால் பகுதிதான் பாரதியின் வாக்கில் கவிதையாக வெளிவந்திருக்கிறது.

# கவிஞனின் வர்ணனை

கவிஞனுக்குக் கற்பனைத்திறன் ஒரு கண் என்று சொன்னால், அவனுக்கு மற்றொரு கண் வர்ணனைத் திறனாகும். 'கற்பனையும் வர்ணனையும் காட்டிக் கதைவளர்க்கும் விற்பனர்கள்' என்று பாரதியார் ஓரிடத்தில் குறிப்பிடுவது கவிஞர்களைத் தான் என்று ஊகித்தால் அது தவறாகிவிடாது. அயன் செய்த தனத்தின் குறிப்பை உணர்ந்து, அழகும் உண்மையும் ஒன்றாய் மிளிர வர்ணிக்கும் ஆற்றல் கவிஞனுக்கு அவசியம் தான்.

பாரதியாரிடம் வர்ணிக்கும் ஆற்றல் நன்றாக அமைந்திருக்கிறது. இதை உதாரணங்கள் மூலமாக அறியலாம்:

சிட்டுக் குருவி ஆகாயத்தில் பறக்கிறது. அதன் சின்ன உருவமும், சந்தோஷமாகப் பறக்கும் காட்சியும் கண்ணுக்குக் குளிர்ச்சியாய், மகிழ்ச்சியாய் இருக்கின்றன.

இவ்வளவு சின்ன குருவிக்கு இத்தனை இன்பம் எப்படி வாய்த்திருக்கிறது? மனிதனுக்கும் இன்னும் மிருகத்துக்கும் இல்லாத இந்த இன்பம் இந்தப் பறவைக்கு மட்டும் எப்படி லபித்திருக்கிறது? இந்தக் கேள்விக்குப்பதில் அதன் வான சஞ்சாரம் தான். அந்த வானத்தில் நிறைந்திருக்கும் ஒளி, என்னவென்று நினைத்தீர்கள்? அமிர்தமாக்கும்!

மட்டுப படாதெங்கும் கொட்டிக் கிடக்கும்
வானொளி என்னும் மதுவின் சுவையுண்டு

வாழும் சிட்டுக்குருவி அது! கச்சிதமான, நல்ல வர்ணனை!

பழந்தமிழ்ப் புலவர்கள் காதலையும் வீரத்தையும் போற்றினர்கள். பாரதியாரும் வீரத்துக்கு ஒரு காவியமும் காதலுக்கு ஒரு குட்டிக் காவியமும் பாடி விட்டுப் போயிருக்கிறார். பாஞ்சாலி சபதத்தையும் குயிலையும்தான் குறிப்பிடுகிறேன்.

குயில் பாட்டில் இளஞாயிற்றின் எழில் வர்ணிக்கப்படுகிறது :

தங்கம் உருக்கித் தழல்குறைத்துத் தேனாக்கி
எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ? வான் வெளியைச்
சோதி கவர்ந்து சுடர்மயமாம் விந்தையினை
ஓதிப் புகழ்வார் உவமை ஒன்று காண்பாரோ?
கண்ணை இனி தென்றுரைப்பார் கண்ணுக்குக் கண்ணாகி
விண்ணை அளக்கும் ஒளி மேம்படுமோ இன்பம்அன்றோ?
மூலத் தனிப்பொருளை மோனத்தே சிந்தைசெயும்
மேலவரும் அஃதோர் விரியும் ஒளி என்பாரேல்
நல் ஒளிக்கு வேறுபொருள் ஞாலமிசை ஒப்புளதோ?
புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி
மண்ணைத் தெளிவாக்கி நீரில் மலர்ச்சிதந்து
விண்ணை வெளியாக்கி விந்தைசெயும் சோதியினைக்
காலைப் பொழுதினிலே கண்விழித்து நான்தொழுதேன்

ஆதவனைக் குறிப்பிடநேரும் போதெல்லாம் அவன் அழகில் பாரதியார் அழுந்திப்போய், 'இதற்கு உவமை காட்ட இயலாது' என்று வியந்து கூறுகிறார். அதுபோல இந்தக் கதிரவன் வர்ணனைக்கும் ஒப்பாகப்பிறிதொரு வர்ணனையைக் காட்ட இயலாது என்று நாம் சொல்ல வேண்டியிருக்கிறது! ஆம்; உயர்ந்த வர்ணனை இந்த வர்ணனை!

குயில் பாட்டில் இன்னொரு பகுதி: வேடர் குலத்தலைவன் வீர முருகனின் மகள் சின்னக் குயிலி காட்டுப் பகுதியில் தோழியருடன் மின்னற் கொடிபோல் களித்து விளையாடிக்கொண்டிருக்கை

யில், சேரமானுடைய மைந்தன் அவளைக் கண்டு காதல் கொள்ளுகிறான். அவளுக்கும் அவனிடம் காதல் பிறந்துவிடுகிறது. இருவரும் தனியிடம் அடைந்து, தங்கள் காதலை வெளியிட்டு, ஒருவர் அணைப்பில் ஒருவர் இணைந்து இன்பம் துய்க்கிறார்கள். இந்த நிலைமையில், சின்னக்குயிலியிடம் ஒருதலைக் காதல்கொண்ட—இதைக் கைக்கிளை என்று இலக்கணம் அறிந்தோர் கூறுவர்—நெட்டைக்குரங்கனும் மாடப்பனும் அவள் காட்டுப்பக்கம் சென்றிருப்பது கேட்டு அங்கே வந்து அவளுடைய காதல் நடவடிக்கையைப் பார்த்து ஸ்தம்பித்து நிற்கிறார்கள், அவர்கள் இருப்பைப் பாரதி எப்படி வர்ணிக்கிறார். பாருங்கள்!

அன்னியனைப் பெண்குயிலி ஆர்ந்திருக்கும் செய்தியொன்று
தன்னையே இவ்விருவர் தாங்கண்டார் வேறறியார்
மாடனைத் தான்கண்டான் மற்றவனும் அங்ஙனமே
மாடன் வெறிகொண்டான் மற்றவனும் அவ்வாறே
காவலன்தன் மைந்தனுமக் கன்னிகையும் தானுமங்கு
தேவ சுகங்கண்டு விழியே திறக்கவில்லை.
ஆவிக் கலப்பின் அமுத சுகந்தனிலே
மேவியங்கு மூடி யிருந்த விழிநான்கு!
ஆங்கவற்றைக் கண்டமையால் ஆவியிலே தீப்பற்றி
ஓங்கும் பொறிகள் உதிர்க்கும் விழிநான்கு!

இரண்டு இரு ஜோடி விழிகளைக் கற்பனை விழியால் கண்டு வர்ணித்திருக்கும் அழகு நினைக்க நினைக்க இன்ப ஊற்றாய்ச் சுரக்கிறது!

இனி, பாரதியார் இயற்கையை எப்படி வர்ணிக்கிறார் என்று பார்க்கலாம்.

விண்ணில் மேகம் சூழ்ந்து, கருத்து அடர்ந்து, இடி இடித்து மின்னல் வெட்டி, மழை 'கொட்டு, கொட்டு' என்று பெய்கிறது. இதைப் பாரதியார் வர்ணிக்கிறார்.

திககுகளை எட்டும சிதறித—தககத
  தீமதரிகிட தீமதரிகிட தீமதரிகிட தீமதரிகிட
பககமலைகள உடைநது—வெள ளம
  பாயுது பாயுது பாயுது—தாமதரிகிட
தக்கத ததிஙகிட திததோம—அண்டம
  சாயுது சாயுது சாயுது—பேய்கொணடு
தக்கை அடிககுது காறறு—தககத
  தாமதரிகிட தாம்தரிகிட தாமதரிகிட தாமதரிகிட
வெட்டி அடிககுது.மினனல—கடல்
  வீரத திரைகொணடு விண்ணை இடிககுது
கொட்டி இடிககுது மேகம—கூ
  கூவென்று விணணைக குடையுது காறறு
சட்டசசட சட்டசசட டட்டா—எனறு
  தாளஙகள கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத திசையும் இடிய—மழை
  எஙஙனம வநத தடாதமபி வீரா!

அண்டம குலுஙகுது தம்பி!—தலை
  ஆயிரம தூககிய சேடனும பேய்போல்
மிணடிக குதித்திடு கினறான்—திசை
  வெற்புக குதிககுது வானததுத தேவா
செணடு புடைததிடு கின்றார்—என்ன
  தெய்வீகக காடசியைக் கணமுன்பு கண்டோம்!
கணடோம கண்டோம கணடோம—இந்தக
  காலததின் கூத்தினைக கணமுன்பு கணடோம!

*தம்பி வீரனைக் கூப்பிட்டு அந்த நாட்டுப்புறத் தான் மழையைக் கண்டு வியந்தான். நாம் எல்லோரும் இந்த மழைப் பாட்டைக் கண்டு வியக்கிறோம்! இயற்கை அன்னை வெறிகொண்டு ஆடிய கோரத் தாண்டவத்துக்கேற்ற சந்தம்! அழகு கொப்பளிக்கும் வர்ணனை!*

*'ஞானரதம்' என்பது பாரதியார் இயற்றிய வசன நூல். இதில் இவர் எத்தனையோ அரிய பெரிய விஷயங்களை அனாயாசமாகச் சொல்லிச் செல்லு*

கிறார். இது உண்மைக்கு உறைவிடமாக இருப்பது போலவே அழகுக்கும் உறைவிடமாக அமைந்திருக்கிறது. இதைப் புதுமைப்பித்தன் வசன காவியம் என்று போற்றுகிறார்.

இந்த நூலிலே ஒரு வர்ணனை:

எதிரே கடல். சந்திர கிரணங்களால் ஜோதி உயிர் கொடுக்கப்பட்ட அலைகள். வெள்ளை மலர்கள் புனைந்து, புஷ்பக் குன்றுகள் கிடப்பதுபோல் தோன்றிய கப்பல்கள். தூரத்திலே அன்னங்கள் மிதப்பது போல மிதந்த இன்பப்படகுகள். மேலே, சந்திரன், வெள்ளிமேகங்கள். இம்மேகங்களிலே சில அலைகள் பரப்பியிருப்பதுபோல் தோன்றும்; ஒன்று பூச் சிதறியதுபோலத் தோன்றும்; நீரே மிதக்கும் படகுகளுக்கு வானக்கண்ணாடியிலே தோன்றும் சாயைகள் போலச் சில மிதந்து செல்லும். இனி நக்ஷத்திரங்கள்! வானக்கடலிலே வெடித்தெழுந்த வயிரங்கள்! சிதறுண்ட இன்பங்கள்! வானப் பொய்கையிலே மனம் என்னும் சிறிய வண்டு போய்த் தேன் குடிப்பதற்கமைந்த எண்ணில்லாத மலர்கள்! திசை என்ற அனந்த வஸ்துவுடன் ஈசனறிவு என்ற அனந்த வஸ்து தாக்கியபோது பொறித்தெழுந்த சுடர்ப்பொறிகள்.

அடடாடா! வர்ணனை என்றால் இப்படி அல்லவா இருக்கவேண்டும்! இதுபோன்ற வர்ணனைகள் இன்னும் எத்தனை எத்தனையோ!

# உண்மை கவிஞர்

பாரதி ஒரு தேசிய கவி என்கிறார்கள் சிலர். அவர் ஒரு அத்வைதக் கவி என்றும் சிலர் பேசுகிறார்கள். வேறு சிலர் அவரைப் பக்தர் என்று கருதி, பக்திக்கவி என்கிறார்கள். இன்னும் ஒரு வகையினர் உயர்ந்த தத்துவ ஞானி, வேதாந்தக் கவி பாரதியார் என்று பெருமையுடன் கூறுகிறார்கள்.

இதெல்லாம் ஒருபுறம் இருக்க, அவரைப் புதுமைக்கவி, புரட்சிக்கவி என்று துடிக்கும் இளஉள்ளங்கள் கருதுகின்றன. அவருடைய 'புதிய கோணங்கி' (குடுகுடுப்பாண்டி)யைப் படித்துவிட்டு 'இவர் ஒரு விகடகவி' கோமாளிக்கவி' என்று கூட சிலர் சொல்லலாம்.

எனக்கு என்னவோ அவரை ஒரு துறைக்கு உரியவராக்கி, இந்தக்கவி, அந்தக்கவி என்று கூறுவதெல்லாம் சாரம் இல்லாததாகப் படுகிறது. இந்த முறையில் பார்த்தால் பாரதியின் முழுத்தன்மையையும் நாம் அறிய முடியாமல் போய்விடுமோ என்கிற அச்சம் உண்டாகிறது.

அவர் ஒரு கவிஞர். வேதாந்தம் பாடலாம்; பக்தியைக் குழைத்துப் பாட்டுக்கள் செய்யலாம்; நாட்டுப் பற்றையும் மொழிப் பற்றையும் ஊட்டுவதற்காகத் தேசிய கீதங்கள் இசைக்கலாம்; இன்னும், எது எது பற்றியோ அவருடைய கவிதைகள் இருக்கலாம். எந்தப் பொருள் பற்றி அவர் கவிதைகள் இருந்தாலும், அவர் கவிஞர்; நல்ல, அழகான கவிவாணர்.

பாரதியை, சுத்தானந்த பாரதியார் கவிக்குயில் என்றுதான் அழைக்க விரும்புகிறார். ஆம், உண்மையே. பாரதி வாழ்க்கைப் பூஞ்சோலையில் தீஞ் சுவைக் கவிதைகள் இசைக்கும் ஒரு குயில்!

கவிஞர் பாரதியின் உவமை நயங்களைப் பார்ப்பது இக்கட்டுரையின் நோக்கம். இந்த நயங்களைப் பார்க்கத் தொடங்கும் முன்பு, கவிதையைப் பற்றிய சில முக்கிய விஷயங்களை ஞாபகப்படுத்திக் கொள்வது நல்லது.

கவிதை என்பது சொற்கலையின் மணிமுடி; கலைகளுக்கெல்லாம் தலைமை பூண்ட கலையரசி. கடவுளை ஓதாது உணர்வதுபோல், இந்தக் கலையைக் கல்லாது கற்க வேண்டும்.

இவ்வளவு உன்னதமான கவிதைக்கு இலக்ஷணம் இதுவரை அறுதியிட்டு எந்த இலக்கண நூலிலும் கூறப்படவில்லை. 'கவிதை என்றால் என்ன?' என்கிற நேர் கேள்விக்கு 'இதுதான் கவிதை' என்கிற முறையில் ரத்தினச் சுருக்கமான பதில் யாரும் கொடுத்ததில்லை! கொடுக்க முடியாது. இலக்கணம் வகுத்ததெல்லாம் கவிதையின் உருவத்துக்கே; சொரூபத்துக்கல்ல.

கடவுள், மனம் வாக்கு இரண்டுக்கும் அப்பால் பட்ட ஒரு தத்துவம். அது போலத்தான் இந்தக் கவிதையும்!

கடவுளை ஒருவர் வார்த்தையில் கூற முற்பட்டார். முயன்று, முயன்று பார்த்துக் கடைசியில் ஒருவாறு தொடங்கினார். 'அரியும் அல்ல, அயனும் அல்ல, அரனும் அல்ல, அப்புறம்; கருமை வெண்மை செம்மையும் கடந்து நின்ற காரணம்; பெரியதல்ல, சிறியதல்ல, பெண்ணும் ஆணும் அல்லவே என்றெல்லாம்

சொல்லிக்கொண்டு வந்தவர் தம்முடைய முயற்சி வீண் என்பதை உணர்ந்துவிட்டார். பாட்டின் நாலாவது அடியில் தோல்வியை ஒப்புக்கொண்டு விடுகிறார். 'துரியமும் கடந்து நின்ற தூரதூர தூரமே!' என்பது தான் நாலாவது அடி.

'கவிதைக்கு இலக்கணம் இதோ கூறுகிறேன்' என்று யாராவது வருவார்களானல், அவர்கள் பாடும் இப்படித்தான் ஆகும்.

மாற்றம், மனம் கழிய நிற்கும் மறைப் பொருளா னாலும், சொல்லுக்கும் மனத்துக்கும் உள்ள எல்லை கடந்து நிற்கும் ஒரு தத்துவம் ஆனாலும், பரம்பொரு ளைச் சப்த உருவமான வேதம் விவரிக்கத்தான் செய் கிறது; மனிதன் மனமும் அதை நாடி அறிய முற் படத்தான் செய்கிறது.

அதுபோல, கவிதையை இன்னது என்று கூற முடியாவிட்டாலும், அதன் தன்மைகளை ஒருவாறு அறியக் கலை உள்ளம் நாடத்தான் செய்கிறது.

உள்ளம் உணர்ந்து கண்ட உண்மையை உணர்ச்சி பொங்க, அழகுபட, சொல்லில் தேக்கிக் காட்டுவதுதான் கவிதை. வேறு வார்த்தையில் சொல்லப் போனல், கவிதையில் உண்மை இருக்க வேண்டும் ; அழகு இருக்க வேண்டும்; அதனல் இன்ப மாகிய நன்மை விளைய வேண்டும். கவிஞர் பாரதியே இக்கருத்தை,

கள்ளையும் தீயையும் சேர்த்து—நல்ல
காறறையும வான வெளியையும சேர்த்துத
தெளளு தமிழ்ப்புல வோர்கள—பல
தீஞ்சுவைக காவியம் செய்து கொடுததார்

என்று குறிப்பிடுகிறார்.

கம்பனின் கோதாவரி வர்ணனையான

புவியினுக் கணியாய் ஆன்ற
பொருள்தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி
ஐந்திணை நெறிய ளாவி
சவியுறத் தெளிந்து தண்ணென்
றொழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்

என்கிற பாட்டும் இதே கருத்தைத்தான் பேசுகிறது.

மேல்நாட்டுக் கவிஞர் கீட்ஸ் (Keats) 'அழகுப் பொருள் என்றும் ஆனந்த ஊற்று'—**A thing of beauty is a joy for ever**—என்று கூறும்போது, கவிதையின் தன்மையைக் கூறவே முற்பட்டார் என்று நாம் அனுமானம் செய்தால் மிகையாகாது.

'தெய்வ மருந்துடைப் பொற்குடம்' என்பது பாரதியின் மணிவாக்கு. கவிதையைப் பற்றித்தான்.

இன்னும், ஒற்றைவாய்க் கணக்கில் சொல்லுவதானால், கவிஞன் கனவு கவிதை. கனவு என்றால் குறைந்த தூக்கத்தில் சாதாரண மனிதன் காணும் குட்டைக்கனவு அல்ல. நிறைந்த அறிவின் திறந்த வெளியில், பட்டப்பகலில் கலை உள்ளம் படைத்தவன், ஈஸ்வர சிருஷ்டியின் உயிர்நாடியைத் தொட்டு வாழ்பவன், கவிஞன் காணும் நெட்டைக் கனவு.

'பட்டப்பகலில் பாவலர்க்குத் தோன்றுவதாம் நெட்டைக் கனவு' என்கிறார் பாரதியார்.

இதுவரை கவிதைக்கு உருவமும் உயிரும் கண்டோம். அத்தகைய கவிதைகளில் பாரதியின் உவமை நயத்தைச் சிறிது ரசிப்போம்.

சுதேசி இயக்கம் ஆரம்பித்த காலம் 'சொந்த நாட்டில் அன்னியர்க்கா அடிமை?' என்கிற ஆத்திரம் பொங்கிப் புரண்டு நாடு முழுவதும் ஓடுகிறது. வங்காளம் 'வந்தே மாதர'த்தைத் தாரக மந்திரமாகத் தந்தது நல்ல சமயத்தில். இந்த மந்திரத்தைக் கூறிக்கொண்டு தாய் நாட்டின் விடுதலைப் பணியில் இறங்கிய தொண்டர்கள் அணிவகுத்து, தெருத் தெருவாய், கிராமம் கிராமமாய், ஊர் ஊராய், தேசிய கீதங்கள் பாடிக்கொண்டு போகிறார்கள். எல்லாம் பொது ஜனங்களின் கும்பகர்ண மனத்தை எழுப்பிவிடத்தான்!

பாரதிக்கு வெகு சந்தோஷம் இந்தக் கூட்டத்தை, தொண்டர் படையைப் பார்க்கும்போது. தாமும் தேசிய கீதங்கள் எழுதி அவர்களுக்கு உதவுகிறார்.

படை நாளுக்கு நாள் வலுக்கிறது. பாரதிக்குச் சந்தோஷம் உச்ச நிலையை அடைகிறது.

இப்படிக் கூடிய ஒரு பெரும் படை. பாரதியார் பார்த்துப் புளகாங்கிதம் அடைந்தார். தாய் நாட்டின் விடுதலை கைக்கு எட்டும் தூரத்தில் இருப்பது போன்ற கனவு!

இந்தக் கனவைச் சிதற அடித்துக்கொண்டு ஓர் உண்மை, அருவருப்பான உண்மை அவரைத் தாக்குகிறது. அவ்வளவு பெரிய தொண்டர் படையில் சில போலிகள், அழகிய நந்தவனத்திலே கோரைப்புற்கள் போல!

கவிஞர் உள்ளம் குமைகிறது; மறு நிமிஷம் குமுறுகிறது:

சிந்தையில் கள்விரும்பிச்
  சிவசிவா என்பதுபோல
வந்தே மாதரம் என்பார்—இனி
  மனதில் அதனைக் கொள்ளார்

சிவ பக்தி எங்கே? கள் வெறி எங்கே? உண்மையான தேச பக்திக்கும் போலி ஈடுபாட்டுக்கும் வெகு தூரந்தான். சரியான உவமை! 'ஜெய் சங்கர்' என்று கோஷிக்கும் வாயாலேயே கஞ்சாப் புகையை உறிஞ்சிப் போதை வெறி ஏறி அலையும் போலிச் சாமியார்களை நாம் பார்ப்பதில்லையா? அதுபோல் தான் இந்தப் போலித் தேச பக்தர்களும்!

இன்னொரு உவமை: ருஷ்ய நாட்டில் ஜார் கொடுங்கோல் ஆட்சி செய்கிறான். ஜனங்களை மதிக்காத, அவர்கள் வாக்குக்குக் காது கொடுக்காத, அவர்கள் உணர்ச்சியை உணர்ந்துகொள்ளாத ஒரு யதேச்சாதிகாரம்; தனியாட்சி. எதிர்த்து எவனாவது 'இம்'மென்று மூச்சுவிட முடியுமா? மூச்சுவிட்டால், பேச்சு பேசினால், கிடைக்கும் பலன் சிறைவாசம் தான்; வனவாசம்தான். இரணியன் அன்று என்றோ ஆண்டான்; இவன் இன்று ஆளுகிறான். அவ்வளவுதான்.

இந்தத் தீய ஆட்சியிலே நன்மை ஏது? உண்மை ஏது? பொய்யும் சூதும் பிற தீமைகளும் 'ஜாம், ஜாம்' என்று முளைத்துக் கிளைத்து மண்டிவிட்டன!

இந்தக் கொடுமையை எல்லாம் பாரதியார் உணர்கிறார். 'ஐயோ! கலிகாலமே!' என்று அங்கலாய்க்கிறார். 'சத்தியயுகம் தோன்றாதா? தீமை மாயாதா?' என்று ஏங்குகிறார்.

நல்ல செய்தி வருகிறது. ஜார் அரசன் முடி இழந்துவிட்டான். நாட்டில் குழப்பம், கிளர்ச்சி

ஜனங்கள் வெற்றி பெற்றுவிட்டார்கள். அவன் வீழ்ந்தேவிட்டான்!

இந்த நற்செய்தி கேட்ட பாரதிக்கு உள்ளம் உவமைக்கடல் ஆகிறது. 'இமயமலை வீழ்ந்ததுபோல் வீழ்ந்துவிட்டான் ஜார் அரசன்' என்று கூறிக் கூத்தாடுகிறார் அவர்.

இமயமலை வீழ்ந்தது!—நடக்கக் கூடிய ஒரு விஷயம் அல்லதான். இருந்தாலும், ஜாரின் கொடுமையையும் அவன் வீழ்ச்சியையும், அத்துடன் கொடுமையின் வீழ்ச்சியையும் தெளிவோடு, உணர்ச்சியோடு காட்ட வேறு எந்த உவமை உதவும்?

*　　*　　*

பாரதியாருக்கு ஒரு நண்பன் கிடைக்கிறான். நண்பன் என்றால் சாதாரண நண்பனா? பேச்சுத் துணைக்கு, வழித்துணைக்கு வருகிறார்களே அவர்களைப் போல ஒருவனா? இல்லை, கண்ணனே அவருக்கு நண்பனாக வருகிறான்.

நெஞ்சில் உதித்த நட்பு, இருதயத்தில் வளர்ந்து, ஆத்மாவில் ஒன்றிவிடுகிறது. ஆமாம், கண்ணன் தான் பாரதி; பாரதிதான் கண்ணன். அப்படி ஆகி விடுகிறார்கள் இரு நண்பர்களும்.

இப்பேர்ப்பட்ட உயிர் நண்பனை, விதிவசத்தால் இழக்க நேரிட்டால்? நினைப்பே உடலை நடுக்குறச் செய்கிறது 'கண்ணன், தன்னை இழந்துவிடில், ஐயகோ! பின் சகத்தினில் வாழ்வதிலேன்!

இது பாரதியாரின் இதய ஒலி!

இந்த உயர்ந்த நண்பனின் பெருமையைப் பற்றி, பாரதியாரால் பேசாமல் இருக்கமுடியுமா? சொல்லுகிறார்.

பிழைக்கும் வழிசொல்ல வேண்டுமென்றாலொரு
பேச்சினிலே சொல்லுவான்

ஓகோ! அப்படியா? பிறகு?

உழைக்கும் வழிவினையாளும் வழிபயன்
உண்ணும் வழி உரைப்பான்

அருச்சுனனுக்கு அன்று உபதேசம் செய்தவன் தானே கண்ணன். அவன் இப்படிச் செய்வது ஆச்சரியம் அல்லதான். சரி, அப்புறம்?

அழைக்கும் பொழுதினில் போக்குச் சொல்லாமல்
அரைநொடிக்குள் வருவான்

ஹா, நிரம்ப நல்லவன்தான் போல் இருக்கிறதே!

இன்னும் கேளுங்கள்:

மழைக்குக் குடைபசி நேரத் துணவென்றன்
வாழ்வினுக் கெங்கள் கண்ணன்

மழைக் காலத்துக்குக் குடை எவ்வளவு அவசியமோ, பசி நேரத்துக்கு உணவு எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியமாகிவிடுகிறான் கண்ணன் பாரதியாருக்கு. வாழ்வு முழுவதற்கும் தான்!

உவமைகளைப் பாருங்கள். தினமும் மூன்றுவேளை நாம் உண்ணும் உணவுதான்; சாதாரணமான குடை தான். இருந்தாலும், பாரதியின் மேதா விலாசத்தால் அவை அழகான உவமைப் பொருளாக மாறி விடுகின்றன. என்ன அழகு! என்ன தெளிவு இந்த உவமையிலே!

* * *

பாரதிக்குக் கண்ணன் வேறு உருவத்தில் காட்சி அளிக்கிறான். அவன் மாயாவி. நினைத்த உருவங்கள் எடுக்க வல்லவன். 'பொய்மை உருவமெனக்

கொண்டவன்' என்று பொன்னிப் பாட்டிக்குக்கூடத் தெரியுமே! (பொய்க்குத்தான் பலப் பல உருவங்கள். மெய்க்கு ஒரே உருவந்தானே!)

அரசனாக வந்தான் கண்ணன். அவனுக்கு அடிமையாக, சேவகனாக அமர்ந்தார் பாரதி.

கண்ணன் அரசன்; பாரதி சேவகன். இந்த உறவே இப்படியே இருந்ததா? இல்லையாம். பாரதியே சொல்லுகிறார்:

திண்ணை வாயில் பெருக்கவந் தேனெனைத்
தேசம் போற்றத்தன் மந்திரி ஆக்கினான்.

என்ன அதிர்ஷ்டம்! என்ன யோகம்! அமர்ந்தது அடிமையாக; ஆனது மந்திரியாக. ஆச்சரியம்.

உவமானம் தன் உருவை மறைத்துக்கொண்டு இங்குக் காட்சி அளிக்கிறது. அதாவது உபமேயத்தை மறைத்து மூடி எங்கோ தொலைவில் வைத்து விட்டுத் தன்னை மட்டும் கிளர்ச்சிகரமாகக் காட்டுகிறது. இது கவிதா சக்தியின் திருவிளையாடல்!

*                *                *

பாரதியின் காவியம் பாஞ்சாலி சபதம். அதன் அழகில் கொஞ்சம் ஈடுபடுவோம்.

கதை எல்லாருக்கும் தெரியும். துரியோதனன் பாண்டவர்களிடம் பொறாமை கொள்ளுகிறான். அதிலும், வில்விஜயனையும் கதை வீமனையும் கண்டு விட்டால், அவனுடைய பொறாமை பற்றிக்கொண்டு 'திகு, திகு' என்று எரிகிறது. விஜயன் மார்பிலும் வீமன் தோளிலும் ஆண்மையும் வீரமும் மட்டுமா கிடக்கின்றன? துரியோதனன் இகழ்ச்சியும் சித்திரம் எழுதியதுபோல் நன்றாய்த் தெரிகிறது; துரியோதனன் கண்ணுக்குத்தான், பொறாமைக் கண்ணுக்குத்தான்.

சூதுக்கு இழுத்தான் அவர்களை. மாமன் துணை கொண்டு, அவர்களை 'மொட்டை அடிக்க' வேண்டும் என்பது அவனுடைய உத்தேசம்.

பேசசை வளர்ததுப பயனென்றும இல்லையென் [மாமனே—அவர்
பேறறை அழிகக உபாயம சொலவாய் எனறன் [மாமனே
தீச் செயல் நறசெயல் ஏதெனி னுமஒன்று செய்து [நாம—அவர்
செலவம கவாநதவரைவிட வேணடும தெருவிலே!

என்று இல்லாத, பொல்லாத கொடுமையோடு வாய் விட்டுச் சொன்ன மகா புருஷன் அல்லவா?

விதி இருக்கிறதே! திருதராஷ்டிரனும் பாண்டவர்களை அரண்மனைக்கு அழைத்தான். ஆயிரம் சாஸ்திரம் பேசும் தருமனும் தம்பிமார்களுடன் வந்து சூதாடச் சம்மதித்துவிட்டான்!

ஆட்டம் நடக்கிறது. சூதாட்டந்தான்.

தருமன் பொன்னை வைத்து ஆடினன்; மணியை வைத்து ஆடினன் தேரைப்பணயம் வைத்தான்; அடிமை மாதரை ஈடு வைத்தான். வாரணக் கூட்டங்களைச் சூதில் வைத்தான்.

எல்லாம் போயிற்று. சூதாட்டம் மட்டும் நிற்கவில்லை!

சகுனி, 'தருமா! கவலை வேண்டாம். யோசிக்காதே. இன்னும் ஏதாவது வைத்து ஆடு. போனதெல்லாம் வரும். வெற்றி உனக்கு இயல்பாயிற்றே!' என்று அவனுக்கு உரிய தொழில் தந்திரத்தோடு பேசினன்.

தருமன் நாட்டைவைத்தான். அதுவும் போச்சு!

'தருமன் நாட்டையா வைத்து ஆடினன்? அவனுக்கு என்ன உரிமை?' என்று ஆத்திரம் பிறக்கிறதா? உண்மை.

பாரதிக்கும் ஆத்திரம் பொங்குகிறது இங்கே. எரிமலைக் குழம்புபோல் வெளிவருகிறது பாரதியின் குற்றச்சாட்டு:

கோயில் பூசை செய்வோர்—சிலையைக
 கொண்டு விற்றல் போலும
வாயில் காதது நிற்போன்—வீட்டை
 வைததி ழத்தல் போலும்
ஆயி ரஙகள ஆன—நீதி
 அவையு ணர்ந்த தருமன்
தேயம வைததி ழநதான்—சிச்சீ !
 சிறியா செய்கை செயதான் !

இரட்டை உவமை இதில் வருகிறது. கோயிலில் பூஜை செய்யும் அர்ச்சகன் காமக் கிழத்திக்குப் பட்டுப் புடவை வாங்க ஆசைப்பட்டான். காசுக்கு எங்கே போவான் அவன்? அதற்காக, அவன் ஆசை அவிந்து விட்டதா? இல்லை. அர்த்த ஜாம பூஜை நடக்கும் சமயம் அர்ச்சகன் எதிரே இருந்த பஞ்சலோக விக்ரகத்தைப் பார்த்தான். அது அவனுக்கு வழி சொல்லிற்று. ஆசை தூண்ட, தீர்மானம் விழுந்து விட்டது அவன் மனதில்.

மறுநாள் காலை பார்த்தால், அர்ச்சகனையும் காணோம்; அந்த விக்ரகத்தையும் காணோம்.

இது ஒரு அநியாயம்.

இன்னொன்று!

பங்களாவுக்குக் காவலாகப் பங்காருவை வைத்து விட்டு உல்லாச யாத்திரைக்குப் போய்விட்டார்கள்

பங்களாவின் சொந்தக்காரர்களான ஐயாவும் அம்மாவும்.

பெரிய பங்களாவில் ஒரு மூலையில் பங்காரு 'கொட்டு, கொட்டு' என்று உட்கார்ந்திருக்கிறான்.

தற்செயலாக அவனுடைய 'சினேகிதன்' அந்தப் பக்கம் வந்தான், இரண்டு மூன்று பேருடன்.

பங்காரு கூப்பிட்டான். நண்பனும் சகாக்களோடு வந்தான். கொஞ்ச நேரத்தில் மேல் துண்டை விரித்துப் போட்டுச் சீட்டாட ஆரம்பித்து விட்டார்கள். சீட்டாட்டம் வெறும் ஆட்டம் அல்ல; காசு வைத்த ஆட்டம்.

பங்காரு கையில் இருந்த காசை எல்லாம் இழந்து விட்டான். ஆட்டத்தில் ஆசை மட்டும் தணியவில்லை அவனுக்கு.

இழக்க இழக்கச் சூது கவர்ச்சியாகத்தான் இருக்கிறது; இழுத்து இழுத்து ஆளை மாட்டிவைக்கிறது, அடர்ந்து அடர்ந்து வரும் துன்ப வாழ்க்கையில் உயிருக்கு மேலும் மேலும் பற்று கெட்டிப்படுவது போல.

பங்களாவின் நினைப்பு வந்தது பங்காருவுக்கு. யோசனை பண்ணுமல் அதைப் பணயம் வைத்து விட்டான். மறுநிமிஷம் பங்களா போயிற்று!

இது என்ன நியாயத்தைச் சேர்ந்தது? இது போன்ற செய்கைதான் தருமன் அன்று செய்தான். நாட்டுக்கு அவன் அரசன்தான். அதனுல் நாட்டை அவன் பணயம் வைப்பதா? சிச்சீ! சிறியர் செய்கைதான் இது!

நாட்டோடு முடியவில்லை தருமன்—சகுனிச் சூதாட்டம். தருமன், வீரத் தம்பிகளை ஒவ்வொருவராய் வைத்து அடிமை ஆக்கினன். தன்னையும் கடைசியில் வைத்து இழந்தான்.

இங்கேயாவது நின்றிருக்கலாம் சூதாட்டம். ஆனல் நிற்கவில்லை.

ஐவருக்கும் பத்தினி, அழியாப் புகழ் திரௌபதியை, துருபதன் கன்னியை, திட்டத்துய்மன் உடன் பிறப்பைத் தருமன் சூதில் வைத்து இழந்தான்.

இந்த அநியாயம் பொறுக்கவில்லை, கவியுள்ளத்துக்கு. படபடப்போடு சொற்கள் வெடித்து வருகின்றன கவிஞர் இருதயத்திலிருந்து:

வேளவிப் பொருளினை யே—புலை நாயினமுன
மென்றிட வைபபவா போல
நீள்விட்ட பொன்மாளி கை—கட்டிப்பேயினை
நோநது குடியேறறல போல
ஆளவிற்றுப பொனவாஙகி யே—செய்த பூணையோர்
ஆந்தைககுப் பூடடுதல போல
கேளவிக கொருவரில லை—உ யிாததேவியைக
கீழ்மககட் களாககினன் !

நாட்டைப் பணயம் வைத்தது கூற, இரண்டு உவமைகள்! தேவியைப் பணயம் வைத்ததைக் கண்டிக்க மூன்று உவமைகள்!

ஆத்திரத்தின் உச்ச நிலையை இந்த உவமைகள் தான் எவ்வளவு வேகமாக, அழுத்தமாகத் தெரிவிக்கின்றன! 'கேள்விக்கு ஒருவர் இல்லையா?' என்று நாமும் கேட்டு விடுகிறோம், கவி உள்ளத்தோடு ஐக்கியப்பட்டுப்போய்!

இப்படி எத்தனையோ உவமைகளைப் பாரதியார் அழகாக, லாகவமாகக் கையாண்டிருக்கிறார். பிரம வித்தையைப் பெறுவது எளிது அல்ல என்கிற கருத்தை விளக்க, 'பையப் பையவோர் ஆமை குன் றேறல் போல்' என்று அவர் கூறுவதைத்தான் பாருங்களேன்; எவ்வளவு தெளிவும் சுவையும் உடையதாக இருக்கிறது!

பாரதியின் உவமைகள் எல்லாம் எளிமையான வைதான். புரிந்து கொள்ளுவதில் கஷ்டம் அதிகம் இருக்காது. இராமனுக்கும் இராவணனுக்கும் நிகழ்ந்த முதல் போரில் இராவணன், இராமன் பகழி தாக்க ஜொலிக்கும் மணி பதித்த முடியை இழந்து நின்றான் என்பதை வர்ணிக்கும் போது,

> சொல்லும அததனை அளவையின் மணிமுடி துறநதான்
> எல்லி மதவெழு மதியமும ஞாயிறும இழநத
> அல்லும் ஒததனன பகலுமஒத தனன்அமா பொருமேல்
> வெல்லும அததனை அலலது தோற்றிலா விறலோன். *

என்று கூறுகிறான் கம்பன். சந்திரனை இழந்த இரவும் சூரியனை இழந்த பகலும் போல் இருந்தான் இராவணன் என்று கம்பன் கூறும்போது, முதல் உவமை அர்த்தமாகி விடுகிறது சுலபமாய்; இரண் டாவது உவமை ஆவதில்லை. சரிதான், பாட்டுக்கு அர்த்தம் புரிந்துவிட்டது' என்று அந்த உவமை யின் கருத்து ஆழத்தைப் பார்க்காமல், அதன் மூல மாகக் கவிஞன் மேதா விலாசத்தைத் தரிசிக்காமல், வார்த்தை அளவில் பொருள் கொண்டு விட்டுப் போய் விடுவது சகஜம். கம்பனின் மேதையை விளக்க ஒரு பண்டிதமணி வேண்டியிருக்கிறது.

---

* இநத உவமையின் அழகைப பணடித மணி கதிரேசஞ செட்டியாா ஒரு கடடுரையில விள ககியுளளாா்.

பாரதியாரின் உவமைகளுக்கு யாருடைய விளக்கமும் தேவை இல்லை. கஷ்டமே இருக்காது, புரிந்து கொள்ளுவதில். அப்படி தப்பித் தவறி ஏதாவது இருந்தாலும், இரண்டாவது முறை வாசிக்கும்போது, இசையோடு பொருந்தி, அர்த்தம் தானாகவே நமக்கு முன்னால் குதித்து விளையாடும்.

கம்பன் அந்தக் காலத்துக் கவிஞன். ஏழாவது உப்பரிகையில் இருந்துகொண்டு, இலக்கியக் கூட்டத்துக்கு, 'சங்கப் புலவர்'களுக்கு அவன் தன் மேதா விலாசத்தை விரித்துக் காட்டுவான், உவமை மூலமாய், உருவகம் மூலமாய், இன்னும் அற்புத சொற் சித்திர சிருஷ்டி மூலமாய்.

பாரதியார் நம் காலத்தவர். தூங்கும் சமூகத்தைத் தட்டி எழுப்ப வந்தவர். அவருடைய கவிதை இன்பக் கவிதைதான்; இருந்தாலும், அதற்குக் காரிய ஆற்றலும் இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது.

நினைத்திருந்தால், பாரதி கம்பன் முறையை அனுஷ்டித்திருக்கலாம், உவமைகளைக் கையாளும் விதத்தில். அவர் பாமர ஜனங்களுக்காக, அவர்கள் நலத்துக்காக வாழ்ந்தவர். அவர் கவிதையில் உவமைகள் யாருக்கும் புரியும் படியாகத்தான் இருக்க வேண்டும்; இருக்கின்றன.

# சக்திதாஸர்

உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தியின் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் சத்தியாக்கிரகம் என்னும் ஒப்புயர்வற்ற சாதனத்தின் ஞாபகம் நம் மனதில் எழுகின்றது. ஜெனீவாவில் பிறந்து, ஐரோப்பா முழுவதும் ஊர் ஊராக ஓடி உயிர் பிழைத்து வாழ்ந்த ரூஸோவின் நாமத்தைக் கேட்ட அளவில் அமெரிக்க, பிரன்ச்சுப் புரட்சிகளுக்கு வித்திட்ட மகாபுருஷன், பேனா வீரன் என்ற நினைவு நமக்கு ஏற்படுகிறது. வங்கத் துறவி விவேகானந்தர் நாமம் 'இவர் வேதாந்த சிம்ஹம்' என்கிற ஞாபகத்தைக் குமிழ்க்கச் செய்து பெருமை ஊட்டுகிறது. 'வ. உ. சி.' என்றவுடன் 'கப்பலோட்டிய தமிழன்' என்கிற பூரிப்பில் தமிழன் தலைநிமிர்கிறான். சுபாஷ் போஸ் என்றாலோ, இந்திய சுதேசிப் படையின் ஞாபகமும், சுதந்திரப் போராட்டத்தில் அதற்குள்ள பங்கும் பளிச்சென்று மனதில் மின் வெட்டுகின்றன. திலகரின் பெயரோ 'சுதந்திரம் எனது பிறப்புரிமை' என்கிற மந்திரத்தின் ஒலிப் பதிவு! இந்த ஒலிப்பதிவை விடுதலை அடைந்துள்ள இன்றைய சூழ்நிலையிலும் நாம் நன்றாகக் கேட்கிறோம். பாரதியார் என்றவுடன் 'இவர் ஒரு தேசீய கவி' என்கிற நினைவுதான் முதல் முதலாக எழுகிறது.

பாரதியார் ஒரு தேசீய கவி. அவருடைய நெஞ்சில் தேசாபிமானம் கனன்றுகொண்டிருந்தது. அவர் நாட்டு மக்களுக்காக அல்லும் பகலும் அறுபது நாழிகையும் பாடுபட்டார். மக்கள் தாழ்வுற்று,

வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக்கெட்டு, பாழ்பட்டு நிற்கும் பரிதாபக்கோலத்தைக் காண அவர் உள்ளம் உருகியது; கண்ணீர் பெருகியது. 'பாரத தேசத்தின் பழம் பெருமை என்ன! இப்பொழுது அதன் மக்கள், அடிமைச் சிறுமதியில் அஞ்சி அஞ்சிச் சாகிறார்களே! என்று உள்ளத் துடிப்புக் கொண்டார். நாட்டின் பழம் பெருமையையும் பிறகு விளைந்த அவக்கேட்டையும் பாட்டில் நிறுத்தி, மக்கள் உள்ளத்திலும் தைரியம் மூட்டினார்; சுதந்திர உணர்ச்சியை அவர்கள் நெஞ்சில் கிளர்ந்தெழச் செய்தார். பேனா, பேச்சு இவ்விரண்டின் மூலமாகத் தேச பக்தி வெள்ளம் நாடு முழுவதும் பாய்ந்து பரந்து கரைபுரண்டோடச் செய்தார்.

அவருடைய தேசாபிமானம் சாதாரணமான தொன்று அன்று. உணவு, உடை, உறைவிடம் என்கிற தேவைகளை மட்டும் இலக்ஷியமாகக் கொண்ட ஓர் உணர்ச்சி அல்ல அது. 'தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்' என்று வீர முழக்கம் செய்த அவர் உணவுக்கு மேற்பட்ட எத்தனையோ கனவுகளை நாட்டின் க்ஷேமத்துக்காகக் கண்டவர்.

பணணில் இனிய பாடலோடு பாயும ஒளியெலாம்
 பாரில எமமை உரிமை கொணடு பற்றி நிற்கவே
நணணி அமரர் வெற்றி கூற
 நமது பெண்களை அமரா கொள்ள
வணணம இனிய தேவ மகளிா
 மருவ நாமும உவகை துள்ள

வேண்டும் என்று கனவு கண்டவர். நாட்டில் பாலும் தேனும் பாய்ந்தோடுவதோடு, தெய்வலோக இன்பமும் நித்திய உண்மையும் தெய்வீக அமைதியும் நிலவவேண்டும் என்று நெட்டைக் கனவுகள் கண்டவர்.

கண்ணில தெரியும பொருளினைக் கைகள்
   கவாந்திட மாட்டாவோ ?—அட
மண்ணில தெரியுது வானம அதுநம
   வசப்பட லாகாதோ ?

*என்றெல்லாம் அவர் கனவுகள் மண்ணிலே விண்ணரசாட்சியைக் குறிக்கொண்டு நிற்கின்றன!*

*பாரதியாரின் தேசீய உணர்வு இமயமலையையும் குமரி முனையையும் கிழக்கு, மேற்கு என்னும் இரண்டு பக்கத்துக் கடலையும் எல்லையாகக்கொண்டு சுருங்கி நின்ற ஒரு உணர்ச்சி அல்ல. அகில உலகத்தையும் பற்றித் தழுவும் ஒரு பரந்த உணர்ச்சியே அது.*

இல்லை என்ற கொடுமை—**உலகில்**
   இல்லை யாக வைப்பேன்

* * *

பாட்டுத் திறததாலே—**இவ்வையத்தைப்**
   பாலித் திடவேணும்

* * *

வல்லமை தாராயோ—இந்த
   **மாநிலம்** பயனுற வாழ்வதற்கே ?

*இவ்வரிகளே போதும் மேற்கூறிய கருத்தை வலியுறுத்துவதற்கு.*

1914-18 *உலக யுத்தத்தின்போது மேலை நாடுகளில் செருமுனையிலே வெள்ளையரும் வேறு நிறத்தவரும் தேஞன உயிரைவிட்டுச் சாவது கண்டு கண்ணீர் பெருக்கினுர் பாரதியார். இதை அவர் வாக்கு மூலமாகவே அறிகிறோம்.*

காக்கை குருவி எங்கள் ஜாதி—நீள
  கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெலாம் நாமன்றி வேறில்லை
  நோக்க நோக்கக் களியாட்டம்

என்று தீர்க்க தரிசனமும் தெய்வ தரிசனமும் கொண்ட கவிஞர் பெருமான் பரந்த தேசாபிமானம் கொண்டிருந்ததில் வியப்பு என்ன இருக்கிறது?

போதுக்கும் பாட்டு பொழுதெலாம் சங்கீதம்
ஏதுக்கும் அஞ்சோம் அவனியெலாம் எம்முடைமை
சூதுக்கும் வஞ்சனைக்கும் சூழ்ச்சிக்கும் மாந்தர்செயும்
வாதுக்கும் மாமருந்து நாங்கள்செயும் வன்கவிதை

என்று தன் இனத்தின் சார்பாகப் பிரகடனம் செய்தானே ஒரு கவிஞன், அந்த இனத்தைச் சேர்ந்தவர்தான் நமது பாரதியார்.

'அவனியெலாம் எம்முடைமை' என்று அறிந்து கூறுவதற்கு ஆதாரமாக நிற்பது, எங்கும் நிறைந்து எல்லாம் ஆகி எதுவும் வல்ல இறைவனைப் பற்றிய பரிபூரண ஞானந்தான். இந்தக் கடவுள் அறிவைப் பாரதியாரும் பெற்றிருந்தார். அவருடைய தெய்வ பக்தி தேச பக்தியைப் போன்று ஆழ்ந்து அகன்ற நுண்ணிய ஓர் உணர்ச்சியே ஆகும்.

நாட்டின் சீர்கேட்டை நெஞ்சில்கொண்டு, அதை நீக்க முயலும் வகையில் அறிவையும் உழைப்பையும் அரிய காலத்தையும் ஈடுபடுத்தும் சீர்திருத்தக்காரர்கள் மிகுதியாய் இருந்த காலத்தில் பாரதியார் தோன்றினர். அவர்களில் சிலர்; வானைமுட்டும் கோபுரத்தோடு விசாலமான இடத்தை அடைத்துக் கொண்டு, வெற்றுச் செயல்களுக்கும் வீண் ஆரவாரத்துக்கும் இடந்தந்து விளங்கிய பெருங்கோயில்களைக் கண்டு பெருமூச்சுவிட்டார்கள். 'இத்தனை

பெரிய இடத்தில் ஒரு தொழிற்சாலை அமைக்கலாமே; ஒரு பள்ளிக்கூடம் போட்டு அறிவை வளர்க்கலாமே!' என்று ஆற்றாமையால் நெஞ்சம் புழுங்கினார்கள். ஆனால் நமது பாரதியாரின் சீர்திருத்தக் கொள்கை வேறு திக்கில், நேரான எதிர்திசையில் திரும்பி வேலை செய்தது. "பள்ளித்தலமனைத்தும் கோயில்கள் செய்வோம்' என்று அவர் உறுதி பகர்ந்தார். 'தும்கம் உயர்ந்து வளர்கெனக் கோயில்கள் சூழ்ந்ததும் இந்நாடே' என்று பெருமைப்பட்டவர் அல்லவா?

கோயில்களைப் பள்ளிகள் ஆக்கும் முயற்சிக்கு எதிர் முயற்சிதானே பள்ளிகளைக் கோயில்கள் ஆக்கும் முயற்சி!

'தெய்வத்தினிடம் அத்தனை பக்தி பாரதியாருக்கு. தெய்வத்தோடு தொடர்பு இல்லாததாய் எதையும் அவரால் கற்பனை செய்து பார்க்க முடியாது. மனிதனை உயர்த்தும் புனிதமான கல்வியைத் தெய்வத் தொடர்புடையதாக அவர் அறிந்ததில் வியப்பு ஒன்றும் இல்லை. பள்ளித்தலங்கள் எல்லாம் வாணிதேவியின் திருச்சந்நிதியாக அவர் எண்ணினார். அவைகள் புனிதத் திருக்கோயில்கள் என்று நினைந்து மகிழ்ச்சிகொண்டார்.

பாரதியார் ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமிலா இறைவனைச் சக்தியாக வழிபட்டார். தம்மைச் சக்திதாஸன் என்று கூறிக்கொண்டார். தமது எண்ணங்களையும் குறைகளையும இலக்ஷியங்களையும் கனவுகளையும் சக்தியிடமே சமர்ப்பித்திருக்கிறார். நம்பினோர் கெடுவதில்லை என்கிற நால்மறைத் தீர்ப்பில் ஊன்றிய நம்பிக்கையினராய், அம்பிகையைச் சரண் புகுந்து அதிக வரம் பெற்று வாழ்ந்தார். பிறரை வாழவைத்தார்.

*பாரதியார் கருவிலே திருவுடையவர். சாதாரண மக்கள் மத்தியில் அவர் வாழ்க்கை அமைந்தாலும், உண்டுறங்கி இடர் செய்து செத்திடும் கலக மானிடப் பூச்சியாக அவர் வாழ மறுத்து விட்டார். மாந்தர்களின் வேஷமும் மோசக் கருத்தும், பொய்யும் புனை சுருட்டும், உதட்டுச் சிரிப்பும் இதயக் கசப்பும் அவருக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. 'போதும் இங்கு மாந்தர் வாழும் பொய்மை வாழ்க்கை எல்லாம்' என்று மன உறுதி கொண்டவர், இந்த உறுதியைப் பராசக்தியிடமே தெரிவித்து விடுகிறார் :*

தேடிச சோறு நிதந்தின்று—பல
சினனஞ் சிறுகதைக கள்பேசி—மனம
வாடித துனபம மிகஉழன்று—பிறா
வாடப பலசெயல களசெயது—நரை
கூடிக கிழப்பருவமெயதி—கொடுங
கூறறுக கிரையெனப பினமாயும—பல
வேடிககை மனித ரைபபோலே—நான
வீழ்வேன் எனறு நினைததாயோ ?

*இந்தத் துடுக்கான பிள்ளையின் ஆவேசமொழியைக் கேட்டு, பராசக்தி ஆனந்தப் புன்னகை அரும்பியிருக்க வேண்டும் !*

*சோற்றுச் சுகத்துககும் வேற்று சுகத்துக்கும் ஓடி ஓடி அலைந்து ஓடாய்த் தேயும் வாழ்வை வெறுத்து, தியாக வாழ்வை, பொதுநலப் பணியை மேற்கொண்ட பாரதியார் தம் வழியில் சில இடையூறுகளைச் சந்திக்கிறார். 'இந்த இடையூறுகளும் உன்னால் தான் நீங்கவேண்டும்' என்று சக்தித் தாயை வணங்கி அவளிடம் முறையிடுகிறார்..*

ஒனபது வாயில குடிலினைச சுறறி
ஒருசில பேயகள வநதே
துன்பப் படுத்துது மந்திரஞ் செயது
தொலைததிட வேணடும் ஐயே !

பகையாவும்—தொலைத்திட வேண்டுமையே !
பேயும பிசாசும திருடரும என்றன்
பெயரினைக கேட்டளவில
வாயும கையுங்கட்டி அஞ்சி நடகக
வழிசெயய வேணடும ஐயே !
தொலலை தீரும—வழிசெய்ய வேணடுமையே !

*கண்ணன் உருவில் வந்த விஷ்ணு சக்தியிடம் இப்படிக் கூடமாக முறையிடும் பாரதியார், இன்னும் ஸ்பஷ்டமாகத் தம் குறையை வெளியிட்டு மகா சக்தியிடம் விண்ணப்பித்துக் கொள்ளுகிறார்.*

மோகத்தைக கொன்றுவிடு—அல்லாலென்றன்
மூச்சை நிறுததிவிடு
தேகததைச் சாய்த்துவிடு—அல்லாலதில்
சிநதனை மாய்ததுவிடு
யோகத் திருததிவிடு—அல்லாலென்றன்
ஊனைச சிதைததுவிடு
ஏகத திருநதுலகம—இங்குளளன
யாவையும் செய்பவளே !
பந்தத்தை நீககிவிடு—அல்லால்உயிர்ப்
பாரத்தைப போககிவிடு
சிநதை தெளிவாக்கு—அல்லால்இதைச்
செத்த உடலாக்கு
இந்தப பதர்களையே—நெல்லாமென
எண்ணி இருப்பேனோ ?
எந்தப் பொருளிலுமே—உள்ளேநின்
றியஙகி யிருப்பவளே !
உள்ளம குளிராதோ ?—பொய்யாணவ
ஊனம ஒழியாதோ ?
கள்ளம் உருகாதோ ?—அம்மாபக்திக்
கண்ணீர் பெருகாதோ ?
வெள்ளக் கருணையிலே—இந்நாய்சிறு
வேட்கை தவிராதோ ?
விள்ளற் கரியவளே !—அனைத்திலும்
மேவி யிருப்பவளே !

இந்த விண்ணப்பத்தைக் கேட்ட சக்தித்தாய் புன்முறுவல் பூத்தாள். இரு கண்களாலும் பாரதியை மலர்ந்து நோக்கினாள். அந்த நோக்கிலே 'மகனே! உன் விண்ணப்பம் கேட்கப்பட்டது; கவனிக்கப் படும்! என்கிற குளிர் வசனம் மிதந்தது. நம்பிக்கை தெறிக்கும் கண்களோடு மிடுக்கு நடை நடந்து புறப் பட்டார் பாரதியார் வாழ்வுப் பாதையில்.

காலம் ஊர்ந்தது. பாரதி போட்ட மனுவுக்குப் பதில் இன்னும் வரவில்லை. அவர் குறிப்பிட்ட பேயும் பிசாசும், திருடரும் தீயரும், மோகமும் பந்த மும், தேகவாதனையும் தீயவாசனையும் முன்போல் கொடுமைப் படுத்தின. அவஸ்தை தாளாமல், ஓடோடி முத்துமாரியைச் சூழ்ந்துகொண்டார்.

'உலகத்து நாயகியே! மாரியம்மைத்தாயே! உன் பாதங்களில் விழுந்து நமஸ்கரிக்கிறேன். கலகம் செய்யும் அரக்கர் கூட்டம் உள்ளத்தில் புகுந்து வேதனை செய்கிறது. இது உனக்குத் தெரிய வில்லையா?

'நூல்கள் பல கற்றுப் பார்த்தேன். மேலோரை அடுத்து உபாயங்கள் பல கேட்டேன். ஒன்றிலும் பயன் இல்லை. இந்த அரக்கர்கள் தொல்லை நீங் காது அப்படியே இருக்கிறது. இது உனக்குத் தெரியவில்லையா?

'துணி வெளுக்க மண் உண்டு. தோல் வெளுக் கச் சாம்பல் உண்டு. மணி வெளுக்கச் சாணை உண்டு. இந்த மானிடன் மனம் வெளுக்க மட்டும் ......ஒரு பொருளும் இல்லையே உன் ஆட்சியில்!

'பிணிகளுக்கு எல்லாம் மருந்து அமைத்தாய். என் தன் பேதமைக்கு மருந்து இல்லையோ? உன்னை

அடைக்கலம் புகுந்தேன். உன் பாதங்களில் விழுந்தேன்'

என்று அம்பிகையின் பாதங்களை இரு கரங்களாலும் பற்றிக்கொண்டார். அம்பிகை மலர் விரிசார்த்தி அருள் புரிந்தாள்.

பராசக்தியின் அருள் பெற்ற பாரதியார் தாம் பெற்ற பேற்றைப் பெருமிதத்தோடு தெரிவிக்கிறார்:

'எடுத்த காரியம் யாவினும் வெற்றி;
எங்கு நோக்கினும் வெற்றிமற் றாங்கே
விடுத்த வாய்மொழிக் கெங்கணும் வெற்றி
வேண்டி னேனுக் கருளினள் காளி.'
'எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி;
எங்கும் வெற்றி; எதனிலும் வெற்றி;
கண்ணும் ஆருயி ருமெனக் கொண்டாள்
காளித் தாயிங் கெனக்கருள் செய்தாள்.'

பராசக்தியின் திருவருளைப் பெற்றுச் சக்தி தாஸனை பாரதியார் அவளை நினைந்து நினைந்து உள்ளங் கசிந்து உருகினார். அவள் பெருமையைப் பண்ணில் அமைத்து இசை பொருந்தப் பாடினார். நோக்கும் இடத்தில் எல்லாம் அவளையே கண்டு அவளுக்குச் சதாகால பூஜை புரிந்தார். நீல விசும்பிலும் கோலக்கடலிலும் அவள் உருவம் தோன்றியது. சுடர்விடும் சூரியனும் கண்சிமிட்டும் தாரகைகளும் அமுதகிரணம் ஒழுகும் சந்திரனும் அவளுடைய ஒளிக்கண்களாய்ப் பாரதிக்குத் தோற்றம் அளித்தன. நீராக, கனலாக, வானாக, காற்றாக, நிலமாக அவள் வடிவுகொள்வதைக் கண்டார். இன்ப துன்பம் அவள். ஏக்கம் தூக்கம் அவள். உயர்வு தாழ்வு அவள். வெட்பம் தட்பம் அவள். இரவும் பகலும் அவள். இடி அவள்; இருள் அவள்; மின்

னல் அவள்; மேகம் அவள்; மதி அவள்; மருட்சி அவள்; கதி அவள்; காட்சி அவள்; கனி அவள்; ரசம் அவள்; பொய் அவள்; போகம் அவள்; மெய் அவள்; மெலிவு அவள்; வலிவு அவள்; வாய்மை அவள்; எல்லாம் அவள்; எல்லாம் அவள்; எல்லாம் அவளே!

பாம்புப்பிடாரன் குழல் ஊதுகிறான். பாரதியார் பார்க்கிறார். அவருக்குப் பாம்புப்பிடாரன் குழல் ஊதுவதாகத் தோன்றவில்லை. பராசக்தி தான் குழல் ஊதுகிறாள் என்கிறார். இதைச் சொல்லுவதோடு மட்டும் நில்லாமல் நிரூபிக்கவும் முற்படுகிறார். *

வேறு எந்த முயற்சியும் கொள்ளாமல், வேறு எந்தச் சிந்தனையும் ஏற்படாமல், பராசக்தி அவர் வாழ்வு முழுவதும் நிறைந்துவிடுகிறாள். அவர் பாட்டெல்லாம் அவளைப் பற்றித்தான்; அவள் புகழ் தான். அவர் செயல் எல்லாம் அவள் பூஜைதான். இப்படி சக்திக்கு ஆத்ம சமர்ப்பணம் நிகழ்ந்துவிடுகிறது. இனிமேல் பாரதி தனி ஆன்மா அல்ல; பராசக்தியின் ஓர் அம்ஸம்; பராசக்தியே!

பராசக்தியின் அம்ஸமான பாரதியாருக்கு நாட்டின் நினைவும், நாட்டு மக்களின் இழிநிலை பற்றிய எண்ணமும் எழுகின்றன. தாயை அழுது வரம் வேண்டுகிறார்:

'அடி தாயே! கல்லை வயிரமணி ஆக்கப்போகிறேன். செம்பைக் கட்டித்தங்கமாகச் செய்யப்போகிறேன். புல்லை நெல்லாகப் புரிய விரும்புகிறேன். பன்றிக்குட்டியைச் சிங்கக்குட்டியாகப் பரிணாமுறச்

* இந்த நிரூபணத்தைப் 'பாரதியாரின் சக்தி' என்ற வசன கவிதைப் பகுதியிலே காணலாம்.

செய்யவேண்டும். மண்ணில் வெல்லத்து இனிப்பை வைக்கவேண்டும்......'

மகன் சித்துவிளையாட விரும்புகிறானே என்று எண்ணிச் சக்தித்தாய் இளநகை புரிகிறாள். எனினும் 'சரி செய்; போ' என்று அநுக்கிரகம் செய்கிறாள்.

ஆனால், இன்னும் பாரதி அடுக்குகிறார்:

'இந்த நாட்டு மக்கள் தொல்லை தீரவேண்டும். உயர்வு, கல்வி, வெற்றி, வீரம், அறிவு, ஆண்மை இவைகளைப் பெறவேண்டும். திரள் திரளாகச் செல்வங்கள், கோடி கோடி வகைத் தொழில்கள் இவர்களுக்கு அமையவேண்டும். இந்திய நாட்டின் பெருமை உலகம் பரவி, விண்ணையும் முட்டவேண்டும். கலி கால் முறிந்து விழவேண்டும். 'தா இந்த வரத்தை' என்றவுடன் சக்தி மாதா மைந்தனை அணைத்துக்கொள்ளுகிறாள். தாயின் அன்பணைப்பில் இருந்தபடியே,' இந்த மக்களின் ஐயம் நீங்க வேண்டும்; அச்சம் ஒழியவேண்டும். முன்பு பார்த்தன், கண்ணன் முதலிய அருமை மைந்தர்களைப் பெற்ற நீ இவர்களையும் அவர்கள்போல் ஆக்க வேண்டும்' என்று விழுந்து நமஸ்கரித்து வேண்டுகிறார்.

நன்றாய் அமைந்த வீணையை எந்த நல்லிசை யாணிதான் புழுதியில் விட்டுவைக்க ஒருப்படுவாள்? அவர் கேட்ட வரங்கள் அளிக்கப்பெற்றன. மகன் கேட்டு மறுக்கும் தாயும் உண்டோ?

'சக்தி, சக்தி, சக்தி என்று சதாகாலமும் கூப்பாடு போட்டுச் சந்தைக் கூட்டம் கூட்டுகிறாரே இந்தப் பாரதியார்! இவர் சக்தி என்று எதைத்தான் சொல்லுகிறார்?' என்று யாரோ சிலர் கேட்டது

*காற்று வாக்கில் கவிஞர் காதில் வந்து விழுந்தது. அந்த நேரல்லாக் கேள்விக்கு நேரான பதிலைப்பாரதி சக்தி விளம்புகிறதைப் பாருங்கள்:*

துன்பம் இலாத நிலையே சக்தி ;
தூக்கம் இலாக்கண் விழிப்பே சக்தி ;
அன்பு கனிந்த கனிவே சக்தி ;
ஆண்மை நிறைந்த நிறைவே சக்தி ;
இன்பம் முதிர்ந்த முதிர்வே சக்தி ;
எண்ணத்(து) இருக்கும் எரியே சக்தி ;
முன்பு நிற்கின்ற தொழிலே சக்தி ;
முக்தி நிலையின் முடிவே சக்தி.
சோம்பர் கெடுக்கும் துணிவே சக்தி ;
சொல்லில் விளங்கும் சுடரே சக்தி ;
தீம்பழம் தன்னில் சுவையே சக்தி ;
தெய்வத்தை எண்ணும் நினைவே சக்தி ;
பாம்பை அடிக்கும் படையே சக்தி ;
பாட்டினில் வந்த களியே சக்தி,
சாம்பரைப் பூசி மலைமிசை வாழும்
சங்கரன் அன்புத் தழலே சக்தி.
வாழ்வு பெருக்கும் மதியே சக்தி ;
மாநிலம் காக்கும் வலியே சக்தி ;
தாழ்வு தடுக்கும் சதிரே சக்தி ;
சஞ்சலம் நீக்கும் தவமே சக்தி ;
வீழ்வு தடுக்கும் விறலே சக்தி ;
விண்ணை அளக்கும் விரிவே சக்தி·
ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி ;
உள்ளத்(து) ஒளிரும் விளக்கே சக்தி.

*இன்னொரு விதமாகச் சொல்லுகிறேன் என்று தொடங்கிப் பாரதிசக்தி சக்திவிளக்கம் இசைக்கிறது:*

ஆதிப் பரம்பொருளின் ஊக்கம் — அதை
அன்னை எனப்பணிதல் ஆக்கம்
சூதில்லை காணுமிந்த நாட்டீர் — மற்றத்
தொல்லை மதங்கள்செய்யும் தூக்கம்.

மூலப் பழம்பொருளின் நாட்டம் — இந்த
மூன்று புவியுமதன் ஆட்டம்
காலப் பெருங்களத்தின் மீதே — எங்கள்
காளி நடமுலகக் கூட்டம்.

காலை இளவெயிலின் காட்சி — அவள்
கண்ணொளி காட்டுகின்ற மாட்சி
நீல விசும்பினிடை இரவில் — சுடர்
நேமி அனைத்துமவள் ஆட்சி

நாரணன் என்றுபழ வேதம் — சொல்லும்
நாயகன் சக்திதிருப் பாதம்
சேரத் தவம் புரிந்து பெறுவார் — இங்கு
செல்வம் அறிவுசிவ போதம்.

ஆதி சிவனுடைய சக்தி — எங்கள்
அன்னை அருள்பெறுதல் முக்தி
மீதி உயிர்இருக்கும் போதே — அதை
வெல்லல் சுகத்தினுக்கு யுக்தி.

மூர்த்திகள் மூன்றுபொருள் ஒன்று — அதை
மூலப் பொருள்ஒளியின் குன்று
நேர்த்தி திகழும் அந்த ஒளியை — எந்த
நேரமும் போற்றுசக்தி என்று.

*இவ்வளவு கூறிய பாரதி சக்தி சக்தி விளக்கம் செய்துவிட்டதாக முழு திருப்தி பட்டு விடவில்லை, அதற்குத் தெரியும் சக்தி சொல்லினுக்கு எளிதாகவும் நிற்பவள் அல்லள்; சொல்லை வேறிடம் செல்ல வழி விடுபவளும் அல்லள் என்று. எனவே முடிவுரையாக*

அல்லி னுக்குள் பெருஞ்சுடர் காண்பவர்
அன்னை சக்தியின் மேனி நலங் கண்டார்.
கல்லி னுக்குள் அறிவொளி காணுங்கால்,
கால வெள்ளத்தி லேநிலை காணுங்கால்,
புல்லி லேவயி ரப்படை தோன்றுங்கால்,
பூத லத்தில் பராசக்தி தோன்றுமே.

என்று கூறிவிடுகிறது.

பொருள் இல்லாப் பொருளின் விளைவில்லா விளைவைச் சொல்லால் அளந்து முடிவுகட்டி விடுவது என்பது யாரால் இயலும்?

பாரதியார் தேச பக்தராய் அரும்பிக் கவிஞராய் மலர்ந்து வேதாந்தியாகப் பழுத்தவர். அவர் வாழ்க்கை தேசபக்தி, கவிதாசக்தி, தெய்வபக்தி இம் மூன்றும் கூடிய திரிவேணி சங்கமம்; பழம் பழமையும் புதுப் புதுமையும் ஒன்றை ஒன்று தழுவி இடம் கொடுத்து ஐக்கியம் பெற்றதோர் அற்புதம்; கர்மத்துக்கும் ஞானத்துக்கும் இடையே அமைந்த பக்திப் பாலம்; முக்குணங்களில் மோச குணமான தாமசத்தை விட்டு, ராஜச குணத்தையும் சத்துவ குணத்தையும் இணைத்த ஒரு தெய்வீகச் சங்கிலி. அவர் பராசக்தியை இருதயக் கோயிலில் எழுந்தருளப் பண்ணி, ஞானச்சுடர் ஒளியில் வெள்ளி செவ்வாய் என்றில்லாமல் அல்லும் பகலும் எல்லா வேளையிலும் வழிபட்டார்; துதித்துப் போற்றினார். நாமும், அன்பு நீர் பாய்ச்சி, அறிவு என்னும் ஏர் உழுது, சாத்திரங் களை போக்கி, வேதப்பயிர் செய்து, இன்பப் பயன் அரிந்து தின்பதற்குப் பாரதியார் வழிபட்ட மகா சக்தியைப் போற்றிப் பணிந்திடுவோம்.

# அவர் வழி

வடக்கே தவம் வளரும் இமயமலை. தெற்கே வாழும் குமரி முனை. கிழக்கிலும் மேற்கிலும் வேகத் திரை கொண்டு வேதப்பொருள் பாடி ஓம் என ஒலிக்கும் கடல். இந்த எல்லைகளுள் அடங்கி இருக்கும் நம்நாடு, ஜனத்தொகையிலும் சரி, நிலப்பரப்பிலும் சரி, ஒரு பெரிய தேசம். இதில் எத்தனையோ பகுதிகள், பிராந்தியங்கள். அங்கங்குள்ள ஜனங்களின் நடையும் உடையும், நில அமைப்பு, சீதோஷ்ணம் முதலிய வெளிப்படையான காரணங்களால், ஒன்றாய் இராமல் வேற்றுமைப் பட்டு நிற்கின்றன. எனினும், அனைவருக்கும் ஒரே சிந்தனை; ஒரே பாவனை. இந்தச் சிந்தனைதான், பாவனைதான் இவ்வளவு பெரிய நிலப்பரப்பை ஒரு தேசம் என்று இணைத்து வைத்திருக்கிறது.

செப்பும் மொழிபதி னெட்டுடை யாள்எனில்
சிந்தனை ஒன்றுடையாள்

என்று பாரதியார் இந்த விசித்திர ஒருமைப்பாட்டை வியந்து பாடுகிறார்.

வேறுபட்ட நடையும் மாறுபட்ட உடையும் வழங்கும் இந்தப் பிராந்தியங்களுக்குள் இரண்டு பிராந்தியங்கள் இன்னும் சில ஒற்றுமைகள் கொண்டு விளங்குகின்றன. அவை தமிழ்நாடும் வங்காளமும் ஆகும். இவ்விரு பகுதிகளும் வீரர்களையும், தீரர்களையும், கவிஞர்களையும், கற்றுணர் அறிஞர்களையும் போட்டி போட்டுக் கொண்டு உலகுக்கு அளித்தது போல் காணப்படுகிறது. அங்கே ஒரு ராமகிருஷ்

ணர் தோன்றினால், இங்கே ஒரு ரமண மகரிஷி தோன்றுகிறார். விவேகானந்தர் வங்காளத்தில் பிறந்தால், ஒரு கிருஷ்ணமூர்த்தி தமிழ்நாட்டில் தோன்றிவிடுகிறார். ஜகதீஸ் சந்திர போஸுக்கு எதிரிடையாக சி. வி. ராமன். சுபாஷ்போஸுக்குச் சமமாக வ. உ. சி. உலகம் போற்றும் கவிஞர் தாகூருக்கு ஈடு சொல்லத் தமிழ் நாட்டில் ஒரு பாரதியார்.

கவிஞர் தாகூரின் பெருமையை உலகம் அறிந்து பரிசு வழங்கிப் போற்றியது. ஆனால், நம் பாரதியின் பெருமையை......உலகம் இருக்கட்டும்; அவர் பிறந்த நாட்டிலேயே அவருக்கு அன்று போதிய மதிப்பு இல்லை. 'உண்மையான கவிதைக்குத் தமிழ்நாட்டில் தக்க மதிப்பு இல்லை' என்று அந்தக் கவிதை உள்ளம் உளைந்து போயிற்று!

உடன் வாழும் மக்கள் உணர்ந்து போற்றாவிட்டாலும், உத்தம கவிஞர் பாரதியார் தம் பெருமையைத் தாமே உணர்ந்திருந்தார்.

புவி அனைத்தும் போற்றிடவான்
புகழ்படைத்துத் தமிழ் மொழியைப்
புகழில் ஏற்றும்
கவி அரசன் தமிழ் நாட்டுக்
கில்லையெனும் வசை என்னால்
கழிந்த தன்றே!

என்று கம்பீரமாகத் தம் பெருமையைத் தாமே கவிதை வடிவில் எடுத்து உரைக்கிறார்.

தமிழ் மொழியை மட்டும் அவர் புகழுக்கு இருப்பிடம் ஆக்கிவிட்டு நின்றுவிடவில்லை. தமிழ் மக்களிடமும் அவர் கவனம் சென்றது. 'ஐயோ! இந்த மக்கள் ஏன் இப்படி வாழுகிறார்கள்?' என்று வருந்

*றிய அவர் உள்ளம், அவர்களை உன்னதப்படுத்தும் வழியையும் சிந்திக்க முற்பட்டது. அந்தச் சிந்தனையின் ஓட்டத்தைத்தான்*

கல்லை வயிரமணி ஆக்கல்—செம்பைக்
　　கட்டித் தங்கமெனச் செய்தல்—வெறும்
புல்லை நெல்லெனப் புரிதல்—பன்றிப்
　　போத்தைச் சிங்கவே றாக்கல்-மண்ணை
வெல்லத் தினிப்புவரச் செய்தல்—என
　　விந்தை தோன்றிட இந் நாட்டை-நான்
தொல்லை தீர்த்துயர்வு கல்வி-வெற்றி
　　சூழும் வீரம் அறி வாண்மை.
கூடும் திரவியத்தின் குவைகள்-திறல்
　　கொள்ளும் கோடிவகைத் தொழில்கள்-இவை
நாடும் படிக்குவினை செய்து—இந்த
　　நாட்டோர் கீர்த்தியெங்கும் ஓங்கக்-கலி
சாடும் திறனெனக்குத் தருவாய்-அடி
　　தாயே உனக்கரிய துண்டோ?

*என்ற பிரார்த்தனையிலே காணுகிறோம். அபாரமான திட்டம்தான். ஐந்து வருஷம், பத்து வருஷம் என்றெல்லாம் எல்லை கட்ட முடியாமல், வாழ்க்கை முழுவதும் பரந்து நிற்கும் ஒரு பெரிய திட்டம்தான். இந்தத் திட்டத்தை நெஞ்சில் சுயநலக் கலப்பு இல்லாமல் வரித்துக்கொண்டு வாழ்நாள் முழுவதும் உழைத்த கவிஞர் பெருமானைத் தமிழ்நாடு எப்படித்தான் போற்றாமல் இருந்ததோ?*

தேடிச் சோறு நிதம்தின்று—பல
　　சின்னஞ் சிறுகதைகள் பேசி—மனம்
வாடித் துன்பம் மிகஉழன்று-பிறர்
　　வாடப் பலசெயல்கள் செய்து-நரை
கூடிக் கிழப்பருவம் எய்தி-கொடும்
　　கூற்றுக் கிரையெனப் பின்மாயும் பல
வேடிக்கை மனிதரை

தமிழ் நாட்டில் காணுகிறார் பாரதியார். அவர் உள்ளம் முன் இருந்த பெருமையையும் மூண்டு முன் நிற்கும் சிறுமையையும் எண்ணிப் பெருந்துயரம் கொள்ளுகிறது; 'அர்ச்சுனன் வாழ்ந்த மாளிகையில் வெளவால்கள் தொங்குவதுபோல் இருக்கிறதே!' என்று நினைத்துத் துவளுகிறது!

அவர் உறுதி செய்துகொண்டு விட்டார். 'இவர்களைக் கரை ஏற்றிவிட்டுத்தான் மறுவேலை' என்று கங்கணம் கட்டிக்கொண்டு விட்டார். ஒரு கவிஞன், பாரதியார் போன்ற மகா கவிஞன், மானிட மனத்தின் சாதாரண எண்ண உலகின் எல்லையைக் கடந்து நின்று, நித்திய நிரந்தர உண்மைகளின் நேருக்கு நேரான தரிசனத்தில் பிறக்கும் உள்ளப் பூரிப்பில் அவைகளைப் பற்றித் தேவகானம் இசைக்கத் துடிக்கும் கவிஞன், நாட்டு மக்களிடம் கவனம் செலுத்தி, அவர்களுடன் தோளோடு தோள் ஒட்டி வாழ்ந்து, அவர்களை உன்னதப்படுத்த நினைப்பது சற்றுக் கடினமான விஷயம். தமிழ்நாடு இந்த விஷயத்தில் மிகுந்த பாக்கியம் செய்ததுதான்!

பாரதியார் மண்ணோடு மண்ணாய்ப் புழுவென நெளிந்த தமிழ்ச் சாதியை மனிதன் ஆக்கி, பின் தேவன் ஆக்க எண்ணம் கொண்டார். தேவன் என்றால் பெயர் அளவில் தேவன் அல்ல. உண்மையிலேயே தேவநிலையில் நிலைநிறுத்த விரும்பினார்.

பண்ணில் இனிய பாட லோடும் பாயும் ஒளியெலாம்
 பாரில எமமை உரிமை கொண்டு பறறி நிறகவே
நண்ணி அமரர் வெறறி கூற
 நமது பெண்கள அமரா கொள்ள
வண்ணம் இனிய தேவ மகளிர்
 மருவ நாமும உவகை துளள

வேண்டும் என்பது அவருடைய உத்தேசம். என்ன உறவு! எத்தனை நெருங்கிய தொடர்பு!

தமிழர்களைத் தேவநிலையில் கொண்டு நிறுத்த வேண்டும் என்பதோடு அவர் திட்டம் முடிவுபெற்று விடவில்லை. அப்படித் தேவனானவர்களை மகாதேவனும் ஆக்கவேண்டும் என்று திட்டமிட்டார். மிக மிகப் பெரிய திட்டம்! மகா கவிஞனுக்கு ஏற்ற மகா பெரிய திட்டம்தான்!

சரி, அவருடைய திட்டம் புரிந்துவிட்டது. அதற்கான வழி? அதைத்தான் இப்பொழுது பார்க்கப் போகிறோம்:

ஒரு சமயம் ஸ்வாமி விவேகானந்தர் தம்மைப் போல் காஷாயம் தரித்த ஒரு சந்நியாசியைச் சந்தித்தார். அவர் காஷாயம் ஒன்றையே நம்பிச் சந்நியாசியாக விளங்கினார்! முகத்தில் தெளிவு இல்லை. உள்ளத்தில் உண்மையின் ஒளி இல்லை. பிறர் உழைப்பிலே வயிறார உண்டதால் தொந்திமட்டும் அவருக்கு வளர்ந்திருந்தது. இதை எல்லாம் பார்த்த விவேகானந்தர் அவரிடம் கேட்டார் 'உமக்குப் பொய் சொல்லத் தெரியுமா?' என்று.

அந்தச் சந்நியாசி இந்தக் கேள்வியை எதிர் பார்த்திருக்க மாட்டார். சற்றுநேரம் ஒன்றும் புரியாமல் விழித்தார். பிறகு உண்மையை ஒப்புக் கொண்டுவிட்டார். "எனக்குப் பொய் சொல்லத் தெரியாது."

"நீர் முதலில் பொய் சொல்லக் கற்றுக்கொள்ளும்; போம்" என்று விவேகானந்தர் கூறி அனுப்பினாராம்.

விவேகானந்தரைப் போலவேதான் பாரதியாரும் சீர்திருத்த வேண்டியிருந்தது. சோம்பலைச் சுகம் என்றும், தமோகுணத்தைச் சத்துவம் என்றும், உழைப்பின்மையைச் சாந்த நிலை எனறும் தவருகக் கருதி வாழ்க்கை நடத்திய மக்களுக்கு அவர் 'ராஜசம் பயில்' என்று உபதேசத்தைத் தொடங்கினுர். 'கோல் கைக் கொண்டு வாழ்' என்றும், 'ஊண் மிக விரும்பு' என்றும், 'சீறுவோர்ச் சீறு' என்றும், 'நாளெல்லாம் வினைசெய்' என்றும் தொடர்ந்து கூறினுர்.

தமோகுணத்தில் மூழ்கிக் கிடந்த மக்களைச் சத்துவ நிலையில் சேர்க்க, ராஜசகுணத்தைப் பயிலச் செய்யவேண்டும் என்று பாரதியார் நினைத்ததில் தவறு ஒன்றும் இல்லை.

'தாமஸத்தை விடு; ராஜஸத்தைப் பயில்; சத்துவத்தில் நில்' என்று சொல்லிவிட்டால் மட்டும் காரியம் ஆகிவிடுமா? தாமஸம் புகுந்த வழியை விழிகொண்டு கண்டு, அதற்குரிய காரணங்களை நீக்க முற்படுகிருர் பாரதியார். முதல் முதலாக, விதியைப் பற்றிய தவருன கொள்கை தமிழர்களின் மதியை எவ்வளவு தூரம் கெடுத்துவிட்டது என்பதை உணர்ந்து தெளிவுபடுத்த முற்படுகிருர். இதனுல், பாரதியார் விதியை மதியால் வெல்லலாம் என்று கருதினுர் என்றே, விதி என்று ஒன்று கிடையாது என்று அடித்துக் கூறினுர் என்றே எண்ணக் கூடாது. மாருக, இளங்கோவடிகள் 'ஊழ்வினை உறுத்துவந்து ஊட்டும்' என்பதை வலியுறுத்த 'நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்' என்று சிலப்பதிகாரம் பாடியதுபோல், பாரதியார் விதியின் வலிமையைத் தெரிவிக்கப் பாஞ்சாலி சபதத்தைப் பாடினுரோ என்று எண்ணத் தோன்றுகிறது. இதில்

கவிஞன் கூற்றாகவும் பாத்திரங்களின் வாயிலாகவும் வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் விதி பெரிது, விதி பெரிது என்று வற்புறுத்தி இருக்கிறார்.

விதியின் வலிமையை உணர்ந்தவர், அதை ராக்ஷச பலமாகக் கொள்ளவில்லை. அதற்கும் மதிக்கும் விரோதம் உண்டு என்பதை அவர் அறிவு ஒத்துக்கொள்ளுவதில்லை. விதி தெய்வீகம். மதி மானிட சக்தி. இந்த இரண்டுக்கும் விரோதம் எங்கிருந்து வரும் என்பதுதான் அவர் கேட்கும் கேள்வி.

மானிட மதிக்கு அனுசரணையாக விதி நியமிக்கிறது என்பதைப் போதிக்கிறார் பாரதியார்,

வெற்றி செயலுக் குண்டு
விதியின் நியமம் என்று
கற்றுத் தெளிந்த பின்னும்—கிளியே
கவலைப் படுவ துண்டோ?
சக்திஅரு ளால்உலகில் ஏறு—ஒரு
சங்கட மவந் தால்இரண்டு கூறு
சக்தி சில சோதனைகள் செய்தால்—அவள்
தண்ணருள் என் றேமனது தேறு.

மானிட மதிக்குத் தெய்வ விதி பக்க பலம்; உற்ற தோழன்; விரோதி அல்ல.

விதியின் போக்கை ஒழுங்காய்ப் புரிந்துகொள்ளாமல் 'விதிவசம், விதிவசம்' என்று சோம்பலிலும் துயரத்திலும் விழுந்து கிடப்பவரைக் கண்டு 'ஆமடா! விதிவசந்தான்! அறிவில்லாதவர்களுக்கு இன்பம் இல்லை என்பது ஈசனுடைய விதி' என்று இடித்துக் கூறுகிறார் கவிஞர்.

அடுத்தபடியாக 'இந்த வாழ்க்கையே பொய்' என்கிற ஒரு தவறான கொள்கை! இந்தக் கொள்

கையை எவ்வளவு அழுத்தமாக, ஆத்திரத்தோடு கண்டிக்கிறார் பாரதியார்!

காணப வெலாம மறையுமென்றால
மறைநததெலாம காண்பமன்றோ
வீண்படு பொய்யி லே—நித்தம
விதிதொ டாநதிடு மோ?
காணபதுவே உறுதிகண்டோம
காண்பதலலால உறுதி இல்லை
காணபது சகதி யாம—இந்தக
காட்சி நித்திய மாம.

என்று முடிவு கூறுகிறார்.

இதனால், 'கண் கண்டதுதான் உண்மை; காண முடியாதது எல்லாம் வெறும் பொய்' என்கிற உலகாயத மதத்தைப் பாரதியார் ஆதரிக்கிறார் என்று எண்ணிவிடக்கூடாது.

சாகத துணியில சமுத்திரம எமமட்டு
மாயையே—இநதத்
தேகம பொய் என்றுணா தீரரை என்செய்வாய
மாயையே!

என்று மாயையை நேருக்கு நேரே நிறுத்தி அவர் சவால் விட்டிருப்பதையும் ஞாபகத்தில் இருத்திக் கொள்ளவேண்டும். அவர் தரிசனம் மிக ஆழ்ந்த தரிசனம்; நித்த, முக்த, சுத்த உண்மையோடு நிரந்தரம் உறவு கொண்டுள்ள தரிசனம்.

வான தனிச்சுடர் நான் கண்டேன்—அதன் அறி
ஆடல உலகென நான்கண்டேன்

என்பது அவர் அளிக்கும் விளக்கம்.

மநதிரத தால இவ வுலகெலாம—வந்த அதன்
மாயக களிப்பெருங கூததுக்காண்—இதைச்

சந்ததம பொய்என் றுரைத்திடும—மடச்
சாத்திரம பொய்யென்று தள்ளடா!

*என்று அந்த வாதத்தை அனுயாசமாக ஒதுக்கித் தள்ளி வாழ வழிகோலுகிருர்.*

ஒன்று பரமபொருள் நாமஅதன் மக்கள்
உலகினபக கேளிஎனறே—மிக
நன்றுபல் வேதம வரைந்தகை பாரத
நாயகி தன்திருக கை.

*என்று வேதவாக்கை ஆதாரமாகவும் காட்டுகிருர்.*

*உலக வாழ்க்கையை வெறுத்து ஒதுக்கிவிட்டு மனிதன் என்ன வாழ்க்கை வாழப்போகிருன்? 'வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும், தெய்வத்துள் வைக்கப்படும்' என்கிற ஆதித் தமிழர் கொள்கையைத்தான் பாரதியார் எடுத்துக் கூறித் தமிழர்கள் மனதில் புகுத்த விரும்பினுர்.*

*இந்த உலகம் பொய்யல்ல; இந்த வாழ்க்கை,*

தூங்கையிலே வாங்குகிற மூச்சு—அது
சுழிமாறிப் போனாலும போச்சு!

*என்று பண்டாரம் பாடிச் செல்லுகிருனே, அது போல் அத்தனே மோசம் அல்ல. பாரதியைக் கேட்டால், 'அடசட்! பித்துக்கொள்ளி மனிதா! உனக்கு ஏனடா அந்தச் சோம்பேறிப் பாட்டு? நான் சொல்லுகிறேன், கேள், என்று.*

எணணிற கடஙகாமல் எங்கும பரந்தனவாய்
விண்ணில் சுடர்கினற மீனேஎலலாம்—பண்
ணியதோர்
சக்தியே நமமைச் சமைத்ததுகான் நூருணடு
பக்தியுடன் வாழும படிககு

*என்று சாதிக்கிருர்.*

வாழ்க்கை வாழத்தான் ஏற்பட்டது. சாவை நினைத்துத் தினமும் சாவானேன்? 'சக்திதனையே சரணம் கொள்ளு—என்றும், சாவினுக்கோர் அச்சம் இல்லை தள்ளு' என்று நமக்கும் தோன்றிவிடுகிறது.

வாழ்க்கை வாழ்வதற்கே என்றாகிவிட்டது. பின், எப்படி வாழ்வது? அதையும் பாரதி சொல்லுகிறார்:

ஆதாரம சக்திஎன்றே
அருமறைகள் கூறும
யாதானும தொழில் புரிவோம்
யாவுமஅவள தொழிலாம்.

மனிதர்களில் இழிந்த மனிதன் என்று ஒருவனும் இல்லை. அதைப்போல், தொழில்களில் இழிந்த தொழில் என்பது கிடையாது. எந்தத் தொழிலையும் 'ஆசையும் தாபமும் அகற்றிப் புரிந்து, ஏங்காமல், அஞ்சாமல், இடர் செய்யாமல் வாழவேண்டும். பலன் இல்லாத வீண்முயற்சியோ, வீணருக்காக உழைக்கும் வெற்று முயற்சியோ ஒருபோதும் கூடாது. உலகத்தில் உள்ள தொழில் அத்தனையும் உவந்து செய்ய வேண்டும். ஏற்படும் பலனை இன்பமாகத் துய்க்கவேண்டும். ஆசையை வளர்த்துக் கொண்டு, மகோதரனாகவும் கபந்தனாகவும் மாறி, பிறர் பங்கில் கைவைத்தல் என்பது கூடாது. 'எல்லாரிடத்திலும் அன்பு பூண்டு வாழ்ந்தால், உழைப்புகூட வேண்டாம்; இயற்கை உணவு அளிக்கும்; தெய்வம் பக்கத்தில் நின்று துணை புரியும்' என்கிறார் கவிஞர் பெருமான்.

வாழப் பிறந்த நாம், சாவை நினைத்து நினைத்துச் சஞ்சலப்படாமல், ஏற்படும் இடைஞ்சல்களுக்கு மனம் நொறுங்கிப்போகாமல், விண்ணின் இடி

5

விழுந்தாலும் 'இப்பொழுது என்ன குடிமுழுகி விட்டது?' என்கிற நெஞ்சு உரத்தோடு, நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும், உலகில் யாருக்கும், எதற்கும் அஞ்சாத தீரமும் கொண்டு சுதந்திர ஜீவர்களாய் வாழவேண்டும். இதற்குத்தான் பாரதி தம் வாழ் நாளை அர்ப்பணித்தார்; முயற்சிகள் புரிந்தார்; தெய்வத்தின் அருளை வேண்டினார்; பிறரையும் தெய்வத்தை நம்பச் சொன்னார்

நமபினோர் கெடுவதில்லை
நானகுமறைத தீா்ப்பு
அமபிகையைச் சரணபுகுந்தால்
**அதிகவரம்** பெறலாம

தெய்வத்தை நம்பாதவர்களுக்குப் பாரதியார் வழிகாட்டவில்லை என்பதில்லை. அவருடைய தெய்வ பக்தி நாஸ்திகத்துக்கும் இடம் கொடுத்து அரவணைக்கும் ஒரு பரந்த உணர்ச்சி. நம்பினால் அதிக பலன் உண்டு என்பது தான் அவர் கொள்கை.

மண்ணுமு காறறும் புனலும் அனலுமு
வானுமு வந்து வணஙகிநில லாவோ?
விணணு ளோர்பணிந் தேவல்செய் யாரோ?
வெல்க காளி பதஙகளென பார்க்கே

இதுதான் அவருடைய நம்பிக்கை.

நல்ல உழைப்பால் செல்வம் பெருகவேண்டும். சரியான, முறையான கல்வியால் அறிவு திருந்தி தெளிவு பிறக்க வேண்டும். உடன் வாழும் உயிர்களிடத்தில் கொள்ளும் அன்பால் மனம் விரிந்து விரிந்து விசாலப் படவேண்டும். இத்தனை குணங்களும் கை கூடினால் மனிதன் தேவனாகிறான். தேவ மனிதன் சிருஷ்டியின் ரகசியத்தை நொடியில் உணர்ந்து கொண்டு மகாதேவன் ஆகிவிடுகிறான்.

இந்த வழியைத் தான் பாரதி காட்டினார். அவர் வழி வலிமை வழி ; வேத வழி ; அன்பு வழி ; ஆக்க வழி ; தெய்வ வழி ; தீமை நீங்கிய சத்திய வழி. இந்த வழியை மக்கள் பின்பற்ற வேண்டும் என்பது அவரது வேணவா. அதற்காகத் தம் இஷ்ட தெய்வத்திடம், சக்தித்தாயிடம் இப்படி ஒரு பிரார்த்தனை செய்கிறார்:

அறிவிலே தெளிவு சித்தத்தில உறுதி
அகத்திலே அன்பினோர் வெள்ளம
பொறிகளின் மீது தனியரசாணை
பொழுதெலாம நினதுபே ரருளின
நெறியிலே நாட்டம கருமயோ கத்தில்
நிலைத்திடல என்றிவை அருளாய்
குறிகுணம ஏதும் இலலாதாய் அனைததாய்க்
குலவிடு தனிபபரம் பொருளே!

தாமஸத்தை ஓட்டி, ராஜஸத்தைக் காட்டி, சத்துவத்தில் நாட்டி, மக்களை வாழவைக்க முயன்ற கவிஞர் பாரதியாரை நினைக்கும்போது

சுகத்தினைநான் வேணடித் தொழுதேனெப் போதும்
அகததினிலே துன்புற றழுதேன்—யுகத்தினி
லோர்
மாறுதலைக் காட்டி வலிமை நெறி காட்டி
ஆறுதலைத் தந்தான் அவன்.

என்று அவருடைய பாட்டு ஒன்றின் கடைசி அடியின் கடைசி இரண்டு சீர்களின் கடைசி எழுத்தைச் சிறிது மாற்றிக் கூறத் தோன்றுகிறது.

வேகாத மனம்கொண்டு களித்துவாழ நெறி காட்டிய பாரதி என்றென்றும் தமிழர்களின் நெஞ்சில் தெய்வமாய் நின்று நிலவட்டும்!

# புதுமைப் பெண்

ஒரு நாள் கூடத்திலே ஜமக்காளத்தை விரித்துப் போட்டு நண்பரும் நானும் பேசிக் கொண்டிருந்தோம். அவருக்கு ஏதோ அவசர வேலை. உட்கார்ந்து பேச நேரம் இல்லை என்றுதான் ஆரம்பத்திலே சொன்னார். இருந்தாலும், பேச்சில் இறங்கினவுடன், நேரம் போனது தெரியவில்லை. அவர் தான் பேசினது. நான் கேட்டுக்கொண்டுதான் வந்தேன். ஒரு சமயம் கிளம்பிவந்த காரியமே அவர் மனதை விட்டு நழுவி விட்டதோ என்னவோ?

அப்பொழுது யாரோ வீட்டில் நுழைவதுபோல் இருந்தது. நான் பார்வையைத் தெரு வாசல் பக்கம் திருப்பினேன். ஒரு பெண் நிலை வாசலண்டை நின்று உள்ளே எட்டிப் பார்த்தாள்.

"யாரது?" என்று கேட்டேன்.

அவள் ஓரடி எடுத்து வைத்து உள்ளே வந்தாள். எனக்கு ஒரே ஆச்சரியம். 'யார் இவள்?' என்று தெரியாமல் திகைத்தேன்.

"என்ன அண்ணா, இப்படி பார்க்கிறீர்கள்?" என்று கேட்டாள் அவள்.

"பத்மாவா நீ! யாரோ வெள்ளைக்காரிச்சிதான் வழி தவறி, தட்டுக் கெட்டு, இந்த வீட்டில் நுழைந்து விட்டாளோ என்று நினைத்தேன்." என்று என் மனதில் அப்பொழுது பட்டதை அப்படியே சொல்லி விட்டேன்.

"வெள்ளைக் காரிச்சியும் இல்லை. ஒன்றும் இல்லை. பாரதியாரின் புதுமைப் பெண் நான்" என்றவள் மறுநிமிஷம் நிற்கவில்லை. ஓடிவிட்டாள்.

நான் திகைத்தது போல், கூட இருந்த நண்பரும் திகைத்துப் போனார். பத்மா முழுக்கால் சட்டை அணிந்திருந்தாள். அவளுடைய அண்ணன் என்னோடு வம்பளந்து கொண்டிருக்கிறானே என்று பார்க்கத்தான் வந்திருப்பாள்.

ஐரோப்பிய மங்கை போலவும், நம் நாட்டு நவ நாகரிக ஆங்கிலோ—இந்தியப் பெண் போலவும், சில பார்ஸி வகுப்புச் சிறுமிகள் போலவும் 'புல் பாண்ட்' அணிந்து கொண்டு தன்னைப் பாரதியாரின் புதுமைப் பெண் என்கிறாள் இந்தப் பத்மா!

அன்றொரு நாள் ஆச்சரியமான காட்சி ஒன்று கண்டேன்: ஒரு வாலிபன். நன்றாக ஸ்நானம் செய்துவிட்டு அரை வேஷ்டியும் இடுப்பில் கட்டிய அங்கவஸ்திரமுமாக, பத்மாசனம் போட்டு உட்கார்ந்திருக்கிறான். அவனுக்குப் பக்கத்தில் வெள்ளித் தட்டில் பல நிறங் கொண்ட பனி மலர்கள். எதிரே ஓங்கார உருவத்தில் அமைக்கப் பெற்ற அக்கினி குண்டம். அதிலே நீர்வற்றி நிறம் மாறிய அரசங் குச்சிகளையும் உலர்ந்து காய்ந்த புரசங்குச்சிகளையும் போட்டு, நல்ல நெய்யையும் ஊற்றி நெருப்பு வளர்த்திருக்கிறது. 'வானை நோக்கிக் கைகள் தூக்கி வளரும்' இந்தத் தீயிலே வாலிபன் பக்கத்தில் உள்ள மலர்களை எடுத்து எடுத்துப் போடுகிறான். அவன் உதடுகள் ஏதோ முணு முணுக்கின்றன. என்ன மந்திரமோ?

நான் நெருங்கிக் கேட்டேன். "ஏம்பா, என்ன இது?"

"அக்னி வழிபாடு"

"மலரை எடுத்து வளரும் தீயில் இப்படி போடுகிறாயே. இந்த வழிபாடு எந்த சாஸ்திரத்தில் கூறியிருக்கிறது?"

"பாரதியாரை உங்களுக்குத் தெரியுமா? அவர் சொல்லியிருக்கிறார்."

பாரதியார் நெருப்புத் தெய்வத்தை வணங்கினவர். அக்னி ஸ்தோத்திரங்கள் அனேகம் பாடி இருக்கிறார். அவர் எந்த இடத்தில் இப்படி வழிபடவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்?

நான் கேட்பதற்கு முன்பே அவன் சொன்னான்.

"அமிழ்தம் அமிழ்தமென்று கூவுவோம்—நித்தம்
அனலை பணிந்துமலர் தூவுவோம

என்று அவர் பாடியிருப்பது உங்களுக்குத் தெரியாதா?"

"ஓகோ" என்று அடுத்தகணம் அவ்விடத்தை விட்டு நகர்ந்து விட்டேன்.

இந்த அக்னி வழிபாட்டைப் பாரதியார் நேரே கண்டால் என்ன நினைப்பார்? அந்தப் பெண் பத்மாவை 'நாம் கனவு கண்டது வீண் போகவில்லை. இதோ நம்முடைய புதுமைப் பெண்!' என்று வரவேற்பாரா? அல்லது 'ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலார்' என்று மனம் புழுங்கி வருந்துவாரா?

பாரதி கண்ட பெண்ணுலகம் எத்தன்மையது என்பதை அவருடைய துணைகொண்டே, அவர் கவிதை மணிவாக்கின் மூலமாக, எழுதிவிட்டுச் சென்ற வசன ஓவியங்களின் மூலமாக அறிய முயலலாம்.

பரந்து கிடக்கும் இவ்வுலகத்துப் பொருள்களை உயிருள்ளது, உயிரற்றது என்று இரு கூறாகப் பிரித்துக் காணலாம். உயிருள்ள பொருள்களிலும் இரண்டு வகை; ஆண், பெண். மரங்களிலே ஆண் வகை, பெண் வகை உண்டு. பூக்களிலே அப்படித் தான். வண்டிலும் அப்படியே. ஈ எறும்பு பறவை யினம், வாழ் விலங்கு ஊர்வனவைகள் அனைத்திலும் அப்படி அப்படியே! இந்தப் பாகுபாடு உயிர் வர்க் கத்தின் நெடுகிலுமே இருக்கிறது.

மனித சமுதாயமும் ஆண், பெண் என்று இரு கூறாகப் பிரிந்து நிற்கிறது. பாதி சமுதாயம் ஆண்; மறு பாதி பெண். இப்படி இயற்கையிலே சமத் தன்மை பெற்ற ஆண்-பெண் சமுதாயத்திலே பெண்ணினுடைய அந்தஸ்து குறைந்தும் ஆண் களின் நிலைமை உயர்ந்தும் இருப்பதான ஒரு அமைப்பு எப்படியோ புகுந்து விட்டது. சமத் தன்மை மாறி ஆணுக்குப் பெண் அடிமை என்கிற விபரீத ஸ்திதி, வேண்டாத அமைப்பு காலக் கொடுமையினால் பிறந்தது. இந்த நிலை நம் நாட் டுக்கு மட்டும் ஏற்பட்ட பீடை அல்ல. உலக முழுவ தையுமே பற்றிய பீடையாகத்தான் உருவெடுத்து வந்தது.

பாரதியார் வாழ்ந்த காலத்திலே மேற்கு நாடு களில் பெண்கள் அடிமை வாழ்வு வாழா விட்டாலும், ஆணுக்கு நிகராக, எல்லா விதத்திலும் சரிநிகர் சமானமாக வாழவில்லை. எனவே, வாக்குரிமை தங் களுக்கும் வேண்டும் என்கிற கிளர்ச்சியில் அவர்கள் இறங்கினார்கள். இங்கிலாந்திலே பெண்கள் உரி மைப்போர் நடத்தி முழு வெற்றி கண்ட செய்தி நம் கவிஞர் காதுக்கு எட்டியது. துருக்கியில் கமால் பாஷா பெண் இனத்தின் முகத்தை மூடி அழகை

மறைத்துச் சுதந்திரத்தைப் பறித்திருந்த 'பர்தா' முறையை ரத்து செய்தார். இப்படி மேலை நாடுகளில் எல்லாம் பெண்கள் விடுதலை பெற்றுப் பொறுப்புள்ள ஜீவர்களாக வசிக்க முற்பட்டுள்ளதைக் கண்ட நம் கவிஞரின் நெஞ்சில் நம்முடைய நாட்டு நிலைமை முள்ளாய்ப் பாய்ந்து குத்தியது.

நம் நாடு அன்று எந்நிலையில் இருந்தது? வெள்ளையனின் கால் கறுப்புப் பூட்ஸுக்குக் கீழே கிடந்து மிதியுண்டு அடிமையாகத் துன்புற்றனர்கள் ஆண் மக்கள். பெண்கள் வீட்டிலே உரிமையற்று ஆணுக்கு அடிமையாய் அடங்கி, ஒடுங்கிக் கிடந்தார்கள். ஆம்; பெண்களின் அந்தக் காலத்து நிலை அடிமைக்கும் அடிமை என்கிற அவலமிக்க நிலைமைதான்.

நாட்டிலே ஆண் அடிமை. வீட்டிலே பெண் அடிமை. நாடு முழுவதும் ஒரு பெரிய அடிமைக்கூடமாகத்தான் தோற்றம் அளித்தது. இந்த அடிமைத் தனத்தை ஒழித்துக் கட்டவேண்டும் என்று கிளர்ந்தெழுந்தது கவிஞரின் சக்திமயமான தூய உள்ளம்.

ஆண்களைச் சுதந்திர புருஷர்கள் ஆக்க அரசியல் கிளர்ச்சி பெரும் போராக மூண்டது. அதே சமயம் பெண் விடுதலையைச் சாதித்து மெய்மையாக்கச் சமுதாய சீர்திருத்தம் சூறாவளி வேகத்தில் தொடங்கியது.

பெண்ணுக்கு விடுதலை இல்லையென்றால், ஆண்கள் சுதந்தரம் நிலைத்து நிற்காது என்பதைப் பாரதியார் நிதர்சனமாகக் கண்டார். 'ஜகத்துக்கு ஆதாரமாகிய பெருங் கடவுள் ஆண் பெண் என இரண்டு கலைகளுடன் விளங்குகிறது. இரண்டும் பரிபூரண சமானம். பெண்ணே அணுவளவு உயர்வாகக் கூறுதலும் பொருந்தும்' என்பது அவரது

திட அபிப்பிராயம். இந் நிலையில் பெண் விடுதலை யின்றி ஆண்விடுதலை எவ்வாறு நிலைத்து நின்று சுகத்தை அளிக்கும்?

'பெண்ணுக்கு விடுதலை என்று இங்கோர் நீதி' பிறப்பிக்கின்றேன் என்று வீறுகொண்டு எழுகிறது சக்திதாஸரின் உள்ளம். அவர் கனவிலே புதுமைப் பெண் தோன்றுகிறாள். பெண் உரிமைகளை யெல் லாம் பறைசாற்றி, முரசறைந்து ஆணுக்குப் பெண் இனிமேல் அடங்கிக் கிடக்கக் கூடாது என்கிறாள். உலக அமைப்பிலே ஆணும் பெண்ணும் இரு கண் ணுக்குச் சமானம்.

கண்கள் இரண்டினில் ஒன்றைக—குத்திக
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள அறிவை வளாத்தால்—வையம
பேதைமை யற்றிடும காணீர்.

என்று வீரமுழக்கம் செய்கிறாள் அந்தப் புதுமைப் பெண்.

அவள் இன்னும் என்ன சொல்லுகிறாள்? அறிவு படைத்த மனித இனத்தை அடிமையாக்க முயல்வது அறிவீனம்; பித்த நிலையில் பிறக்கும் ஒரு செயல். மானிடம் தேவ நிலையை எட்டிப் பிடிக்க வேண்டும். அதற்குச் சிறுமைத் தொண்டும் அடி மைப் பிழைப்பும் முதலிலே வெந்து நீறாக வேண் டும். ஆணுக்குப் பெண் நிகரென்று கொள்வதால் அறிவு ஓங்கும்; ஆண்மை சுடர்விடும்; வையம் தழைக்கும். நாணத்தையும் அச்சத்தையும் உதறித் தள்ளிவிட்டுப் பெண்கள் ஞான நல்லறத்தையும் வீர சுதந்திரத்தையும் உயிரினும் இனிய குணங்களாகப் போற்றவேண்டும்.

வீரப்பெண் பெற்றெடுத் தளிக்கும் குழந்தை வீர புருஷனாக வளருவான். கற்பு, கற்பு என்று

சொல்லிக் கொண்டு, அதைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகப் பெண்ணை அடிமைப் படுத்துவது ஒவ்வாத செயல். குலத்து மாதர்களுக்குக் கற்பு இயல்பாகும். அறிவை அழித்துவிட்டு இந்தப் பெண் நலத்தைக் காக்க முயலுவது அறிவற்ற மூடச் செயலாகும்.

இவ்வளவு சொல்லும் புதுமைப் பெண் இன்னும் சொல்லுகிருள் :

பெண்கள் தலைகுனிந்து தரையில் பதிந்த பார்வையோடு செல்வதைவிட்டு, நேர்கொண்ட பார்வை கொள்ள வேண்டும்; நிமிர்ந்த நன்னடை போட வேண்டும்; அச்சமின்றி, கூச்சமின்றி நல்லது என்று மனம் ஒப்பிய நெறிகளிலே ஞானச் செருக்கோடு செல்ல வேண்டும். அறியாமை இருளில் அழுந்தி அவலம் எய்திக் கலையின்றி வாழ்வதை உமிழ்ந்து தள்ள வேண்டும். இது பெண்ணுக்குரிய தர்மம் ஆகும்.

வாழ்க்கையின் நுட்பங்களை விழிகொண்டு காண வேண்டும். விதவிதமான நூல்களை விரும்பிக் கற்று மனம் தெளிவுற வேண்டும். வீட்டிலே அடுக்களையில் முடங்கிக் கிடக்காமல் வெளியே வந்து, வெளி நாடுகளுக்கும் சென்று, புதுமைகளை எல்லாம் அறிந்துணர்ந்து நாட்டு நலத்துக்காக அவைகளை வழங்கவேண்டும்.

ஆண் மக்களின் கட்டைவிரல் ஆட்சியில் அடங்கிக் கிடக்கும் பெண்கள் இனியும் அப்படி இருத்தல் ஆகாது. அவர்கள் புகழும்படியாக, மனித இனத்தைக் காக்கும் செயல்களை ஏராளமாகச் செய்து, அனைத்தையும் தேவயக்ஞமாக்கி வாழ்க்கையிலே புனிதத் தன்மையையும் புத்தொளியையும் கூட்ட வேண்டும்.

*இப்படி பேசும் புதுமைப் பெண் இதுவரை காணாத ஒரு நவீன சிருஷ்டியல்ல என்கிறார் பாரதியார்.*

புதுமைப் பெணணிவள் சொற்களும் செய்கையும
பொய்மை கொணட கலிக்குப் புதிதன்றிச்
சதும றைப்படி மாந்தா இருந்தநாள
தனனி லேபொது வான வழககமாம்
மதுரத தேமொழி மஙகையா உண்மைதேர்
மாத வப்பெரி யோருடன் ஒப்புற்றே
முதுமைக காலததில் வேதங்கள் பேசிய
முறைமை மாறிடக் கேடு விளைந்ததாம்

*என்று புதுமைப்பெண் வாய்மொழியாகவே இந்தக் கருத்தை வெளியிடுகிறார்.*

*பாரதியாரின் புதுமைப் பெண் ஒரு விசித்திர சிருஷ்டிதான். அவளை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். வீட்டிலே கூட்டம் கூடிக் கும்மி யடித்த பெண்களை அறைகூவி அழைத்து*

கும்மி யடிதமிழ் நாடு முழுவதும
குலுஙகிடக் கைகொட்டிக கும்மியடி
நம்மைப பிடித்த பிசாசு கள் போயின
நன்மை கண் டோமென்று கும்மியடி
பட்டஙகள ஆள்வதும சட்டஙகள் செய்வதும்
பாரினிற பெண்கள நடத்தவந்தோம
எட்டும் அறிவினில ஆணுக்கிங கேபெண
இளைப்பில்லை காணென்று கும்மியடி
வேதம படைக்கவும நீதிகள் செய்யவும்
வேணடிவந் தோமென்று கும்மியடி
சாதம் படைக்கவும் செய்திடு வோம்தெய்வச்
சாதி படைககவும செய்திடுவோம்
காதல் ஒருவனைக கைப்பிடித் தேஅவன்
காரியம யாவினும் கைகொடுத்து

மாதர் அறங்கள் பழமையைப் போலவே
மாட்சி பெறச்செயது வாழ்வமடி.

என்று லக்ஷியத்தைக் கூறி முடிக்கிருள்.

வேதம் படைக்க முன்வந்துள்ள இந்தப் புது மைப் பெண் சாதம் படைக்கவும் செய்வாளாம். காதலனோடு வாழும் வாழ்க்கையில் ஒட்டுறவோடு துணை நின்று, கை கொடுத்து, மாதர் அறங்களை ஒளியுறச் செய்வாளாம். பழமையைக் காட்டிலும் மாட்சி பெறச் செய்வோம் என்று அவள் சொல்லுவது பொருள் பொதிந்த வாசகம்; சிந்திக்க வேண்டிய வார்த்தை.

இங்கே, நண்பர் ஒருவர் சொன்ன குட்டிக் கதை ஞாபகத்துக்கு வருகிறது. அந்தக் கதை இதுதான்—

கூட்டம் கூடிப் பிரசங்கம் நடந்துகொண்டிருக்கிறது. பாரதி நினைவு நாளைத் தமிழர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து கொண்டாடுகிருர்கள்.

கூட்டத்திலே ஆண்கள் இருந்தார்கள். பெண் மணிகளும் இருந்தார்கள். தங்களுக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்ட தனி இடத்திலே பெண்கள் பேசாமல் கொள்ளாமல் அமைதியாக அமர்ந்திருந்தார்கள்.

'பாரதியும் பெண்களும்' என்கிற விஷயம் பற்றிப் பேச்சாளர் கன உத்சாகத்தோடு பேசிக் கொண்டே போனர். அந்தச் சமயம் கமலா கட்டிடத்துக்குள் நுழைந்து கூட்டத்தில் கலந்து கொண்டாள்.

வந்தவள் கொஞ்சம்கூடத் தயங்காமல், யோசனை பண்ணுமல் ஆண்கள் வீற்றிருக்கும் இடத்தை அணுகி ஒரு பென்ச்சில் கம்பீரமாக உட்கார்ந்து கொண்டாள்.

பெண்கள் கூட்டம் கமலாவின் பேரில் பார்வையைத் திருப்பியது. கமலா இதை நொடியில் உணர்ந்து கொண்டாள். இருந்தாலும் அவள் கூச்சமோ அச்சமோ கொள்ளவில்லை. அவள் செய்தது என்ன தப்பா?

பிரசங்கி 'தடதட'வென்று சொல்லைக் கொட்டிக் கோஷித்தார். பெண்கள் எல்லாம் அவர் சொல்லிலே கவனத்தையும் கருத்தையும் செலுத்தலானார்கள். ஆண்களும் அப்படியே.

கமலாவுக்கு மட்டும் கவனம் பேச்சில் இல்லை. கொஞ்சம் கொஞ்சமாக அந்த மனசு இளக்கம் கண்டு அவளை உபத்திரவப்படுத்தியது. கொஞ்ச நேரத்தில், இருக்க வேண்டிய இடத்தில் இல்லாமல், வேறு எங்கேயோ இருப்பது போன்ற உணர்ச்சி அவளைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டது.

இந்த உணர்ச்சியின் பிடியிலிருந்து உதறிக் கொண்டு விடுதலை பெற அவள் யத்தினித்தாள். பிரயோசனப்படவில்லை.

பேச்சு தங்கு தடங்கல் இன்றி ஓடுகிறது. கமலாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. எழுந்திருந்து வெளியே வந்தாள். சற்று நேரத்தில் மறுபடியும் வந்து கூட்டத்தில் கலந்து கொண்டாள்.

இப்பொழுது அவள் ஸ்தானம் எங்கே? பெண்களுக்கு மத்தியில் தானும் ஒரு பெண்ணாக அவள் அமர்ந்திருந்தாள்.

அவள் வந்து அமர்ந்ததை மற்ற பெண்கள் கவனிக்காமல் இல்லை. கவனித்து, புன்சிரிப்போடு அவளை வரவேற்கவும் செய்தார்கள்.

கமலா இதைக் கண்டு கொஞ்சம் வெட்கப்பட்டது வாஸ்தவம். ஆனாலும், அவளுடைய மனதுக்கு எத்தனை ஆறுதலாக இருந்தது!

பிரசங்கி பேச்சின் முடிவை நெருங்கி,

மாதா தமமை இழிவு செயயும
 மடமையைக கொளுததுவோம
வைய வாழ்வு தனனில் எந்த
 வகையிலும நமககுளே
தாதா எனற நிலைமை மாறி
 ஆணகளோடு பெணகளும
சரிநி காச மான மாக
 வாழவமஇந்த நாட்டிலே,

என்று பாடிவிட்டு அமர்ந்தார். இந்தப் பாட்டைக் கேட்டு முகத்தை மூடிக் கொண்டாள் கமலா!—

மேற்படி கதை என்னவோ குட்டிக் கதைதான். எனினும், பாரதியாரின் புதுமைப் பெண்ணுக்கு ஒரு வகையிலே பூரண விளக்கம் தருகிறது. வாஸ்தவமாக, அல்லல்மிக்கதோர் மண்படு கல்வி, பேடிக் கல்வி, மண்ணும் பயனில்லாத மடமைக் கல்வி என்றெல்லாம் கவிஞர் இகழ்ந்து ஒதுக்கிய கல்வியைத் தலையில் சுமந்துகொண்டு, அறிவற்று, அகங்காரம் மிகுந்து, ஆண்களாக முயலும் பெண்களும் ஆண் வேஷம் போடும் பெண்களும் பாரதியாரின் புதுமைப் பெண்ணுக்கு வெகு தொலைவில் தான் நிற்கிறார்கள்.

அவர் கண்ட புதுமைப் பெண் பெருமேறிய வேத காலத்துத் தொன்மை. தாய்மையை அணியாகப் பூணும் கற்புத் தெய்வம். பெண் அறத்தையும் தொன்னெறிகளையும் போற்றி வீட்டறம் பேணும் இல்லக்கிழத்தி. இதயராணி. அவள் பெண்; புதுமைப் பெண்!

* * *

பாரதியார் கண்துயிலாது கனவினில் கண்ட புதுமைப் பெண்ணைப் பார்த்தோம். இனி இந்தப் பகுதியில், அந்தப் புதுமைப்பெண் வீட்டு வாழ்க்கையை எப்படி நடத்துகிறாள் என்று சிறிதளவு பார்க்கலாம்.

„ தங்கையும் தமக்கையும் பெண்தான். அத்தையும் 'சித்தி'யும் பெண்தான். மாமியும், மாமன் மகளும் பெண்தான். இருந்தாலும் பெண் என்றவுடன் பெற்ற அன்னையின் நினைவும் கைப்பிடித்த பெய்வளையின் நினைவும் முன்னே வந்து நிற்கின்றன. ஏன் ?

மனித வாழ்க்கையில் பெண் அன்னை, மனைவி என்ற இரு கூறாக நின்று பொறுப்பை வகிக்கிறாள். தங்கையும் தமக்கையும் அத்தையும் மாமியும் சித்தியும் மற்ற பெண்ணுறவுகளும் பெண்மைக் கோவிலில் சுற்றுத் தெய்வங்கள் என்றால், மனைவியும் அன்னையும் முக்கிய தெய்வங்கள்; மூல விக்ரகங்கள் !

ஆணுக்குப் பெண்மைக் கோயிலிலே இந்த இரு தெய்வங்களின் அருள் நிறைய கிடைக்கிறது. இருந்தாலும், இங்கே அவனுக்கு ஒரு சங்கடமும் முளைத்து விடுகிறது. தாய்க்கு மகனாகப் பிறந்து, மனைவிக்கு உற்ற, உகந்த கணவனாக வாழும் எந்த ஆண் பிள்ளையும் இந்தச் சங்கடத்தை வாழ்க்கையில் ஒரு கட்டத்தில் அனுபவிக்கத்தான் செய்கிறான். இந்த இரண்டு பெண் தெய்வங்களில் ஒவ்வொன்றும் அவனைத் தனக்கே உரிய பக்தனாகச் செய்து மனங்களிக்க விரும்புகிறது. அன்பின் இழுப்புக்கும் காதலின் கவர்ச்சிக்கும் இடையே அகப்பட்டு ஆண் மகன் சொல்லொணாத தொல்லைப்படுகிறான்.

இந்த உலக நடவடிக்கையை வைத்து, இரு பெண்கள் ஒரு கூரையின் கீழ் அமைதியாக வாழ்

வது என்பது சாத்தியமான காரியம் அல்ல என்கிற லௌகீக அனுபவ ஞானம் பேசப்படுகிறது. இதற்கு ஆதாரமாக, கலைமகளையும் மலர்மகளையும் உதாரணமாகக் கூறுகிறார்கள். இவர்கள் இருவரும் மாமி, மருமகள் உறவில் உள்ளவர்களாம். ஒத்து வாழும் இயல்பு இவர்களிடம் இல்லாத காரணத்தால் தான், செல்வம் உள்ள இடத்தில் வித்தை இருப்பதில்லை; வித்தை இருக்கும் இடத்தில் செல்வம் தலை காட்டுவதில்லை என்கிறார்கள்.

பாரதியார் கண்ட பெண்ணுலகத்தில் இந்த விபரீதம் நிகழுவதில்லை. அங்கே மாமியும் மருகியும் ஒளிமிக்க சூழ்நிலையில் செயலாற்றுவதால், வாழ்க்கையை நடத்துவதால், சண்டை கிடையாது; பிணக்கு கிடையாது; வீண் வெறுப்பும் மனக் கசப்பும் புகுவதே இல்லை- அன்னை அன்புச் சுரங்கமாக விளங்குகிறாள். 'காரியம் யாவினும் கை கொடுக்க இதோ நான்' என்று வந்து சேர்ந்த மனைவி இன்ப ஊற்றாக விளங்குகிறாள். பெண்மையின் இவ்விரண்டு கூற்றையும் ஒரு சேரக் கவிஞர் புகழ்வதைப் பாருங்கள்:

போற்றி தாயென்று தோள்கொட்டி யாடுவீர்
புகழ்ச்சி கூறுவீர் காதல் கிளிகட்கே
நூற்றி ரண்டு மலைகளைச் சாடுவோம்
நுண்ணி டைப்பெண் ஒருத்தி பணியிலே.
போற்றி தாயென்று தாளங்கள் கொட்டடா
போற்றி தாயென்று பொற்குழல் ஊதடா
காற்றில் ஏறியவ் விண்ணையும் சாடுவோம்
காதல் பெண்கள் கடைக்கண் பணியிலே.
அன்னம் ஊட்டிய தெய்வ மணிக்கைகள்
ஆணை காட்டில் அனலை விழுங்குவோம்
கன்னத் தேமுத்தம் கொண்டு களிப்பினும்
கையைத் தள்ளும்பொற் கைகளைப் பாடுவோம்.

# அஞ்சலி

மேல் நாடுகளிலே கவிதையைப் பற்றிய விமர்சனம் மிகுதியாகச் செய்யப்பட்டிருக்கிறது. கவிஞன் சமுதாயத்துக்கு வேண்டாத ஒரு வீணன் என்கிற பிளேட்டானியக் கொள்கை ஒரு கோடியிலும், கவிஞர்கள்தான் உலகத்துக்கு நீதியையும் ஒழுக்கத்தையும் போதிக்கத்தக்க யோக்கியதாம்ஸம் இயற்கையாக அமையப்பெற்றவர்கள் என்று கூறிய ஷெல்லியின் கொள்கை ஒரு கோடியிலுமாக, இவற்றுக்கிடையே எத்தனையோ கருத்துக்களும் கொள்கைகளும் விவாதிக்கப்படுகின்றன. அவற்றில் முக்கியமானவைகளில் ஒன்று கவிதையின் பயன் என்ன என்பதாகும்.

கவிதை, அழகைக் காட்டி ஆனந்தம் ஊட்ட வேண்டும் என்பது ஒரு கக்ஷி இல்லை; உண்மையைச் சொல்லி உன்னதப் படுத்த வேண்டும் என்பது அதற்கு எதிரிடையான கக்ஷி. இவ்விரண்டு கக்ஷிகளும் சமமான பலம் படைத்து இன்று வரை நிலைத்து வருகின்றன, மேலை நாடுகளில்.

நம் நாட்டைப் பொறுத்தவரையில் இந்தக் கக்ஷி பேதம் கிடையாது. சிறப்பாக, தமிழர்களுக்கு அது கிடையவே கிடையாது. ஏன்? தமிழன் இன்பம் ஒழுக்கத்தின்பால் பட்டதாய் இருப்பதால்.

அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும இல.

என்பது தமிழ் மறை அல்லவா?

எனவே, தமிழ் இலக்கியத்தில் இன்பக் கவிதைகள் என்றும் ஒழுக்கக்கவிதைகள் என்றும் திட்டமாக அறுதியிட்டு வகுத்துவைத்த அமைப்பு ஒன்றும் கிடையாது. தமிழ்க்கவிஞன் இங்கே ஒழுக்கத்தைச் சார்ந்துநின்று உலகுக்கு இன்பம் தரும் கவிதைகள் புனைகிறான். 'அறம் பொருள் இன்பம் வீடெய்தல் நூற்பயன்' என்பது ஒரு தமிழ் இலக்கணவிதி!

பாரதியார் பாடல்களிலே எத்தனையோ அறிவுரைகள் சிதறிக்கிடக்கின்றன. நாட்டுமக்களைத் திருத்தவும் இன்பமுறுத்தவும் அல்லவா இவர் கவிதைகள் புனைந்தது! இப்படி உள்ள அறிவுரைகளிலே இவருடைய தத்துவ ஞானப் பெருக்கைக் காட்டக் கூடிய பகுதிகளும் இருக்கின்றன. உதாரணமாக,

கால நடையினிலே—உன்றன்
காதல் விளங்குதடி

என்பது ஒரு பகுதி.

ஞானம் காலத்தை அபேக்ஷித்துக் கனிந்து பழுப்பதைப் பாரதியார் இப்படிக் கூடமாகச் சொல்லுவது நினைந்து இன்புறத் தக்கது.

மையாடு கண்ணியும
மைந்தரும் வாழவும
மனையும செந்தீ

ஐயாநின் மாயை
உருவெளித் தோற்றம்
அகிலத்துளே

மெய்யாய் இருந்தது
நாட்செல நாட்செல
வெட்டவெறும

பொய்யாய்ப் பழங்கதையாய்க
கனவாய் மெல்லப்
போயினவே!

என்னும் பட்டினத்தடியாரின் பாடல் பாரதி பாடலோடு ஒப்பிட்டு நோக்குதற்கு உரியது.

தீககுள விரலைவைத்தால நந்தலாலா—உன்னை
தீண்டும இனபம தோன்றுதடா நந்தலாலா

என்பதும் ஆழ்ந்த சிந்தனைக்கு இடம் கொடுக்கும் கவிதைப் பகுதிதான்.

இவை போல் இன்னும் எத்தனையோ காட்டலாம் பாரதியாரின் மேதையை விளக்கிக் காட்ட.

பாரதி ஒரு சிறந்த கவிஞர். இவர் கவிதை தமிழரின் பொக்கிஷம். அதைப் படித்துப் படித்துப் பெற வேண்டிய பயன் முழுவதும் பெறுவது தமிழர்களின் கடமை.

கவிதையை உணர, கவிஞன் ஆக ஒருவன் கல்லாடத்தையும் தாயுமானவரையும் பயிலவேண்டும் என்று பாரதியார் கூறியிருக்கிறார். இந்த இரண்டு நூல்களோடு தம்முடைய கவிதைகளையும் இவர் குறிப்பிட்டிருக்க வேண்டும். தன்னடக்கம் தடுத்திருக்கலாம். ஆனால், நாம் சேர்த்துச் சொல்லுவதில், கொள்ளுவதில் என்ன தடை இருக்கிறது!

**அஞ்சித் துயர் உழன்று அல்லலுற்று வாடாமல்**
**மிஞ்சிப் பெருமைபெற வேண்டுதியேல்—நெஞ்சே!**
**தகாதனவெ லாநீக்கித் தக்கனவே காட்டும்**
**மகாகவி பாரதியை வாழ்த்து.**

சக்தி சக்தி என்று சதாகாலம் பாட்டிசைத்து
முக்திக்கு வித்திட்டமூதறிஞன்—தித்திக்கும்
பாட்டாலே வையத்தைப் பாலித்த பாரதிப்பேர்
கேட்டாலே போதுநமக் கே
கற்பனைக்கோர் வைப்பிடத்தைக் காதலுறு வர்ணனையை
இப்புவியில் எங்கேகண் டின்புறலாம் ?—செப்பக்கேள்
பாட்டும் வசனமுமாய்ப் பாரதி விட்டகன்ற
ஏட்டிலே கண்டிடலாம் இன்று !

—★—